விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 தை 15 புதன்கிழமை (28.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040




# தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த முகர்ஜி இலங்கைக்கு விஜயம்



## இன்று ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் மோதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், வெளிநாட்டமைச்சர் ரோகித போக்கொல்லாகமவையும் இன்று சந்தித்து விரிவான பேச்சுக்களை பிரணாப் முகர்ஜி நடத்தவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பேராலயத்தில் தொடர் உண்ணாவிரதம்

வன்னியில் ஏற்பட்டிருக்கும் மனிதப் பேரவலத்தைத் தடுக்குமாறு கோரி யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க குருமார், துறவிகள் இணைந்து அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தவுள்ளனர். இந்தப் போராட்டம் இன்று யாழ்.பேராலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. அதிகரித்திருக்கும் மனித அவலத்தை உரிய தரப்பினர் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரி இன்று காலை 9மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இந்த அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெறவுள்ளது. (ச)

## இந்தியாவின் உதவிகளை மறைக்கவே பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு பயணம்

### வைகோ குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைக்கான இந்தியாவின் ஆயுத உதவிகளை மறைப்பதற்காகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை வந்ததாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஒரு வார காலமாக முல்லைத்தீவு பகுதியில் வான் படையும், இராணுவமும் நடத்தும் தாக்குதலில் அப்பாவித் தமிழ் மக்கள் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் கொல்லப்படுகிறார்கள்.

இத்தனை (02ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவின் பல பகுதிகளில் இரு தரப்புக்கும் கடும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவின் பல பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த மோதல்கள் சுமார் 30 தடவைகள் இடம்பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இதில் படைத்தரப்புக்கு சிறிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் புலிகள் பாரியளவிலான இழப்புக்களை சந்தித்துள்ளனர்.

ஆயினும் அவ் விபரங்கள் குறித்து இது வரை உறுதியாக கூறும் வகையில் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லையெனவும் ஊடக நிலையம் தெரிவித்தது.

இது தொடர்பில் பாதுகாப்புக்கான ஊடக நிலையம் மேலும் கூறியதாவது;

முல்லைத்தீவில் பல முனைகளில் இருந்தும் முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டு வரும் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் நிலை குறித்து சர்வதேச சமூகம் ஆழ்ந்த கவலை



எரிக்சொல்ஹெய்ம்

(நியூயோர்க்)

வன்னியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரதும் கடமையென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

மோதல்களுக்குள் சிக்குண்டிருக்கும் அப்பாவிப் பொதுமக்களின் நிலைமை குறித்துக் கவலை வெளியிட்டிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம், அம்மக்கள் இரு தரப்பினராலும் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களின் நலன்புரித் தேவைகளுக்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

அத்துடன் அந்தப் பகுதியிலுள்ள மனித நேய (12ஆம் பக்கம் பார்க்க)



பான் கீ மூன்

## இந்.முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் காலமானார்

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வெட்கட்ராமன் காலமானார். அவருக்கு வயது 98.

இந்தியாவின் 8-வது ஜனாதிபதியாக 1987 யூலை 25 முதல் 1992 யூலை 25 வரை பதவி வகித்தவர் ஆர்.வெங்கட்ராமன். உடல் நலக்குறைவு காரணமாக டெல்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் கடந்த 12ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் அவர் காலமானார்.

ஆர்.வெங்கட்ராமனின் இயற் பெயர் ராமசாமி (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு கைப்பற்றப்பட்டமைக்கு ஜனாதிபதிக்கு ரணில் பாராட்டு தெரிவிப்பு

வன்னியில் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுத்து மக்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவை எமது படையினர் வெற்றிகரமாக கைப்பற்றியுள்ளனர். அதற்கு வழிகாட்டிய ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவைக்கும் ஐ.தே.கவின் சார்பில் நன்றிகளை தெரிவிக்கின்றேன். வட பகுதியில் எமது படையினர் பெற்ற வெற்றிகள் தொடர்பில் ஐ.தே.க. தனது கௌரவத்தையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது என்றார். (ச-5)

## வடக்கு -கிழக்கில் வெள்ளியன்று பூரண ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

### தமிழ்க் கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி நிலப்பரப்பில் இடம்பெயர்ந்துள்ள அப்பாவி பொதுமக்கள் மீது குறிப்பாக அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் கடற்றொழில் கட்டுப்பாடுகளை நீக்குமாறு பாதுகாப்புச் செயலருக்குக் கடிதம்

## அமைச்சர் டக்ளஸ் அனுப்பி வைப்பு

யாழ். மாவட்டத்தில் இருந்துவரும் 78 ஆயிரத்து 553 அங்கத்தவர்களைக் கொண்ட 17 ஆயிரத்து 882 கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் ஊரடங்கு மற்றும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு எதிரான தடைகள் காரணமாக 2006.08.11 ஆம் திகதி முதல் தங்களது தொழிலை இழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்க அதிபரின் மூலம் உலருணவு வழங்கப்படுகின்றபோதிலும் அது பற்றாக்குறையாக உள்ளதென மக்கள் அதிருப்தி காட்டி வருகின்றனர். கிட்டத்தட்ட 8 ஆயிரம் சமுர்த்தி பயனாளிகள் குறைந்த அளவிலான உலர் உணவு விநியோகங்களைப் பெறுகின்றனர் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் கடற்றொழில் தொடர்பிலான கட்டுப்பாடுகளை நீக்கக்கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது பகலில் குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட காலத்தில், இயந்திரப் படகுகளில் தொழில் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதித்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் முதல்வாரத்திலிருந்து யாழ்ப்பாணம் மேற்கு மற்றும் கிழக்கு கடலேரிப் பகுதிகளில் கண்ணாடி நார்ப்படகுகளுக்கும் வெளி இணைப்பு இயந்திரங்களுக்கும் தொழில் அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் அது போதாமை காரணமாக நடைமுறையில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டி உள்ளது.

இரு தசாப்த காலங்களாக கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் மற்றும் யாழ். மக்களின் பெரும்பாலானவர்களது போஷாக்கின்மை, இந்நிலையில் புதிய சந்ததியினரின் வளர்ச்சிப் பெறுமானம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு எதிராக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போது யாழ்ப்பாணத்தின் மாதாந்த மீன் உற்பத்தி சுமார் 234 மெற்றிக் தொன் ஆகும். 1983 இற்கு முன்னர் இது 4 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்து பின்னர் 1991-2001 காலப் பகுதியில் மாதாந்த சராசரி 184 மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்து பின்னர் 2003-2006 காலப் பகுதியில் மாதாந்த சராசரி 1481 மெற்றிக் தொன்னாக அதிகரித்ததாயினும் 2007 - 2008இல் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக அவ்வுற்பத்தி மிகவும் வீழ்ச்சியுற்றுள்ளது. இதனால் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களின் ஜீவனோபாயத்திற்கு கடும் கஷ்டங்களை உருவாக்கியுள்ளது மட்டுமின்றி யாழ்.மக்களின் நாளாந்த போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் அபகரித்து விட்டது.

வெகுவிரைவில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு மாநாடொன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவதற்கும் யாழ். குடாநாட்டில் இடம் பெயர்ந்திருக்கும் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கும் எண்ணியுள்ளதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பல்கலைக் கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றும் நடந்தது

வன்னியில் நடைபெற்றுவரும் மோதல்களில் அங்கிருக்கும் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

மோதல்கள் நடை பெற்றுவரும் பகுதியிலுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் தொடர்பாக கவலையுற்றிருக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் உள ரீதியாகப் பாதிப்புற்றிருப்பதாகவும் இதனால் வன்னியில் நடைபெறும் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டுவர இரண்டு தரப்பினரும் முன்வர வேண்டுமெனவும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

(எ-5)

# சீமெந்து வழங்க நடவடிக்கை

ஓறியன்டல் பிறின்ஸ் -4 கப்பல் மூலம் சீமெந்து ஏற்றிவரவுள்ளதால் சீமெந்து விநியோகம் தொடர்பாக திணைக்களங்கள், அரசாங்க ஒப்பந்தகாரர்கள், நிறுவனங்கள், வணக்க ஸ்தலங்களிடம் இருந்து கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக கணக்காளரிடம் தொடர்பு கொண்டு 05.02.2009ற்கு முன்னர் பணத்தை செலுத்துவதற்கு ஏதுவாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# சட்டமாணி கற்கைக்கான நுழைவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படவுள்ள சட்ட மாணிக் கற்கை நெறிக்கான நுழைவுப்பரீட்சை (அனுமதிப் பரீட்சை) எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை யாழ் இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளதாக யாழ் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய ஏனைய பரீட்சை நிலையங்களுக்கென அனுமதி அட்டை பெற்றவர்களும் தோற்ற முடியும் என இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இந்தியாவின் உதவிகளை மறைக்கவே...

லட்சம் மக்கள் அவதிப்படும் முல்லைத்தீவில் இந்திய அரசு கொடுத்துள்ள குறைந்த தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைகளைத்தான் இராணுவம் பயன்படுத்தி இடைவிடாது எறிகணைகளை வீசுகிறது.

வல்லிபுனம் கோயிலுக்கும் மூங்கிலாறு பகுதிக்கும் இடையில் உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதிகளிலும் நடத்திய கோரத்தாக்குதலில் அப்பாவி தமிழ் மக்கள் 500 பேர்-தாய்மார்கள், குழந்தைகள் கொல்லப்பட்டு உள்ளனர். இதில் கொடுமை என்னவென்றால், இங்கு தாக்குதல் நடக்காது பாதுகாப்பான பகுதி என்று இராணுவம் அறிவித்துவிட்டு அங்கு மக்கள் வந்த பின்னர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளது. இந்த தாக்குதலில் படுகாயமுற்ற 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் முதலுதவி கூடப்பெறமுடியாமல் மருந்துகள் இன்றி, சிறுகச்சிறுகச் செத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

ஐ.நா. மன்றத்தின் இலங்கைக்கான அலுவலரும் இந்தத் தாக்குதலை கண்டித்துள்ளார். எனவே தமிழ் இனத்தை அழிக்க முற்படும் அரசுக்கு இந்திய அரசு உதவுகின்ற துரோகத்தை மூடிமறைக்க பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த மூன்று மாத காலமாக போர் நிறுத்தம் என்று ஒப்புக்குக்கூட மத்திய அரசு சொல்லவில்லை. அதைவிட, அது எங்கள் வேலை அல்ல என்று ஆணவத்தோடு சொன்ன பிரணாப் முகர்ஜி திடீரென்று கொழும்பு செல்ல. வேண்டிய மர்மம் என்ன?

உலகெங்கும் உள்ள தமிழர்கள் நடுங்கும் நெஞ்சோடு, கண்ணீர் விட்டுக்கதறும் துயரம் சூழ்ந்துள்ள இந்த நேரத்தில் திடீரென்று விடுதலைப்புலிகளுக்கு பிரணாப் முகர்ஜி கண்டனம் தெரிவிப்பதன் மர்மம் என்ன?

ஐந்தரை லட்சம் ஈழத் தமிழர்கள் இருக்கும் முல்லைத்தீவில் இடைவிடாத தாக்குதலும் வான்குண்டு வீச்சையும் அரசு நடத்துகையில் அப்பாவி தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்படும் பேரழிவு ஏற்படும் என்பது பிரணாப் முகர்ஜிக்குத் தெரியாதா?

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தமிழகச் சட்டமன்றத்தின் ஒருமனதான தீர்மானத்தை இந்திய அரசு அவமதித்து உதாசீனப்படுத்தியது.

சிங்கள மண்ணில் பாகிஸ்தானும் சீனாவும் கால் பதித்து விட்டன. இந்தியாவின் தென் முனையில் இந்தியாவுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஈழத் தமிழர்களை அடிமை இருளிலே தள்ளுவதால் இயல்பாக ஏற்படும் தற்காப்பு அரணையும் உடைத்துவிட்டு எதிர்காலத்தில் தென்முனையிலும் பகை நாடுகளின் ஆபத்தை வலியத்தேடி இந்திய அரசு உருவாக்குகிறது.

துரோகத்தின் உச்சக்கட்டமாக இந்திய அரசு இலங்கை இராணுவத் தாக்குதலுக்கு உதவ இந்திய இராணுவ டாங்கிகளையும் 3 ஆயிரம் இராணுவ வீரர்களையும் கேரளத்தின் கொச்சித்துறைமுகத்தில் இருந்து அனுப்பிவைக்கும் ஏற்பாட்டை மிக வேகமாகச் செய்து முடித்துள்ளதாகத் தகவல் வந்துள்ளது.

இது உண்மையாக இருக்கக் கூடாது என்று உள்ளம் பதறினாலும் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு ஏராளமான இராணுவ டாங்கிகள் தமிழகத்தில் ஈரோடு வழியாகக் கேரளாவுக்கு அனுப்பப்பட்டபோது எடுத்த படம் தினத்தந்தி ஏட்டின் ஈரோடு பதிப்பில் வெளியாகி உள்ள நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்திய அரசு செய்து வந்துள்ள துரோகங்களையும் நினைக்கையில் இந்தக் கொடிய துரோகத்தை இந்திய செய்து இருக்கவும் கூடும் என்ற எண்ணமே வலுக்கிறது.

மொத்தத்தில் ராஜபக்ஷ அரசு நடத்துகின்ற இன அழிப்பு போரை பின்னால் இருந்து இயக்கி வந்துள்ள இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒரு கொடூரமான குறிக்கோளுடன் தீங்கான நோக்கத்துடன் ஆலகால விடம் நிறைந்த வஞ்சக சதித்திட்டத்தைத் தீட்டி அதனை செயல்படுத்துகிறது என்ற உண்மை ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்தே தீரும்.

ஏழு கோடித் தமிழர்களின் உணர்வுகளைக் காலில் போட்டு மிதித்துவிட்டு தமிழ் இனத்திற்கு துரோகம் செய்யும் இந்தியாவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு மன்னிப்பே கிடையாது.

இந்தத் துரோகத்தை தமிழ் மக்களும் எங்கள் வருங்கால தலைமுறையினரும் மன்னிக்கவே மாட்டார்கள் என எச்சரிக்கின்றேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# கட்டுப்பாடு எதுவுமின்றி உருளைக்கிழங்கு விநியோகம்

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட உருளைக் கிழங்கு, மாவட்டத்தில் உள்ள 24 ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி உருளைக்கிழங்கினை கட்டுப்பாடின்றி உடனடியாக பொது மக்களுக்கு விநியோகிக்குமாறும் மேலதிகமாக உருளைக்கிழங்கு தேவைப்படின் உடனடியாக அதற்கான வழங்கற்கட்டளையை ப.நோ. கூ. சங்கங்கள் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று உருளைக்கிழங்கினை கோண்டாவில் களஞ்சியத்திலிருந்து பெற்று பொதுமக்களுக்கு விநியோகிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 20/02/2009
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 21/02/2009

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology
-Executive Officer

## இன்று ஒரு தகவல்

# குறை ஒரு குறையல்ல!

"என்னை விட யோக்கியன் இந்த உலகத்தில் வேறு யாருமில்லை" என்றார் ஒருவர்.

அவரைவிட அயோக்கியன் வேறுயாரும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு நான் உடனே வந்து விட்டேன். மனிதனுக்கு இருக்கும் மிகப்பெரிய குறையே தன்னிடம் உள்ள குறை அவனுக்கு தெரியாது. ஆனால் அடுத்தவனிடம் உள்ள குறை இவனுக்குத் தெளிவாகத் தெரியும்.

ஒரு ஒட்டகம் கொக்கைப் பார்த்துக் கேட்டதாம் : "உன் கழுத்து ஏன் இப்படி வளைந்து போயிருக்கு?" என்று இதற்கு உடம்பே வளைந்திருக்கு... இதுபோய் கொக்கை கிண்டல் செய்கிறது.

இன்றைக்கு மனித சுபாவமும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்கிறது. இந்த உலகத்தில் குறையில்லாத மனிதர்கள் யாருமே கிடையாது. நாம் உட்பட என்பதை முதலில் நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஊரில் செல்லப்பிராணிகளை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று இருந்தது. அதில் நாய், கிளி, பூனை எல்லாம் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

நாய்க்குட்டி விற்பனை செய்யும் பகுதியில் ஒரு சிறுவன் நின்று விலை கேட்டுக் கொண்டிருந்தான்.

"அதோ அந்த நாய்க்குட்டி என்ன விலை?" என்றான்.

"ஆயிரம் ரூபாய்" என்றார் கடைக்காரர்

"சரி... அது வேண்டாம். இது என்ன விலை?" என்றான்.

"ஐநூறு ரூபாய்" என்றார்.

இந்த சின்னப் பையன் கையில் வைத்திருந்தது வெறும் 50 ரூபாய் மட்டுமே. அதனால் இதைவிட விலை குறைவாக கிடைக்குமா? என்று பார்த்தான்.

அந்தக் கடையில் ஒரு மூலையில் கவனிப்பாரற்ற நிலையில் ஒரு நாய்க்குட்டி படுத்திருந்தது. பாவமாக கத்திக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் இவனுக்கு மிகவும் பிடித்து விட்டது. உடனே அந்தக் கடைக்காரரைப் பார்த்து, "அதோ அந்த மூலையில் படுத்துக்கிடக்கும் அந்த நாய்க்குட்டி என்னவிலை?" என்று கேட்டான்.

"தம்பி... அதற்கு ஒரு கால் ஊனம்... அதனால் அது உன்னோடு குதித்து விளையாடவோ ஓடவோ முடியாது" என்றார் அவர்.

"அது தெரிந்து தான் கேட்கிறேன். அதன் விலை எவ்வளவு?" என்று கேட்டான்.

"தம்பி... இது கால் ஊனமுள்ள ஒரு நாய். இதைப் போய் யாராவது காசு கொடுத்து வாங்குவார்களா? இதை இலவசமாகவே தருகிறேன் வாங்கிக் கொண்டு போ" என்றார்.

இ;தைக் கேட்டதும் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "நீங்கள் ஒன்றும் சும்மா கொடுக்க வேண்டாம். இந்தாங்க ஐம்பது ரூபாய். இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு நாய்க்குட்டியை வாங்கி மார்போடு அணைத்து கொண்டு போனான். .

கடைக்காரர் ஆச்சரியமாக அவனைப் பார்த்தார். அப்பொழுதுதான் அவருக்கு ஒரு விஷயம் புரிந்தது.

நாய்க்குட்டியுடன் நடந்து போய்க் கொண்டிருந்தானே அந்த சிறுவன் அவனுக்கும் ஒரு கால் ஊனம்!

இந்த நாய்க்குட்டியை யாருமே வாங்கமாட்டார்களா என்று நினைத்துக் கொண்டிருந்தார். குறையுள்ள அதற்கும் ஒரு எஜமான் கிடைத்துவிட்டான். அதனால் ஊனம் ஒரு குறையல்ல என்பதை அவர் புரிந்து கொண்டார்.

கொஞ்சம் வயதான ஆள் ஒருவர் இருந்தார். எழுந்து நடக்க மாட்டார். சாய்வு நாற்காலியிலேயே எப்பொழுதும் உட்கார்ந்திருப்பார்.

அவர் தனக்குத் துணையாக ஒரு நாயை வைத்திருந்தார். அதுவும் ஒரு வயதான நாய். எழுந்திருக்கவே சிரமப்படும். அந்தப் பெரியவரைப் பார்க்க வந்த ஒருவர், "ஏன்... நீங்கள் ஒரு சின்னப்பையனை உதவிக்கு வைத்திருக்கலாமே. இந்த நாயைப் போய் வைத்திருக்றீர்களே. ஒரு ஆபத்து வந்தால் இது எப்படி உங்களுக்கு உதவும்?" என்றார்.

எனக்கு ஒரு ஆபத்து வந்தால் என்னைத் தனியாக விட்டுட்டு ஓடிப்போய்விடாமல் இருக்கும் அல்லவா! அதனால்தான் இதை வைத்திருக்கிறேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பூரணத்துவம் பெற்ற கல்வியை வழங்க பரீட்சை முறைகள் மாற்றப்பட வேண்டும்

## பேராசிரியர் ஜி.பி. குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் தற்போது நடைமுறையில் உள்ள பரீட்சை முறைமை மாற்றப்பட வேண்டும் என கல்வித்துறையில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

புதிய சட்டம் தயாரிக்கப்படும் போது இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்படும் என குழுவின் தலைவர் பேராசிரியர் ஜி.பி. குணவர்த்தன தெரிவித்தார்.

குறிப்பாக 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தர சாதாரண தரப்பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சைகள் என்பன குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பரீட்சைகள் மாணவர்களின் உண்மையான ஆற்றல்களை பரீட்சிப்பதில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

பூரணத்துவம் பெற்ற கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு இந்த பரீட்சைகளின் முறைகள் மாற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வருடம் தரம் 9க்கான புதிய பாடத்திட்டத்திற்குரிய பாடநூல்களை தயாரிக்கும் பணிகள் அடுத்தமாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுத்திணைக்களம் தெரிவிக்கின்றது.

அதனைத் தொடர்ந்து 2 மாதங்களுக்குள் பாடநூல்களை தயாரிக்கும் பணிகள் யாவும் பூர்த்தியடையும் என கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என். ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார். (ஓ-4)

# வவுனியா வைத்தியசாலையில் இருந்து 30 நோயாளர்கள் மன்னாருக்கு மாற்றம்

யுத்த மோதல்கள் தீவிரமடைந்துள்ள முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்குக் கடந்த வியாழக்கிழமை நோயாளர்கள் கொண்டு வரப்பட்டிருந்தனர்.

இவர்களில் சிலர் உட்பட வன்னிப்பிரதேச நோயாளர்கள் 30 பேர் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாதிருப்பதுடன் மன்னாரில் தங்கியிருந்து சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரே பணியாற்றுகிறார்.

இதனையடுத்தே இவ்வாறு நோயாளர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வன்னியில் அவசர மேல்சிகிச்சை தேவைப்படும் பல நோயாளர்களை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு வருபவர்களுக்கு இடவசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் இந்த நோயாளிகள் வவுனியாவில் இருந்து இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-5)

## கிரிக்கெட் அணிகள் விண்ணப்பிக்கவும்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தின் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளனர். கலந்து கொள்ள விரும்பும் கிரிக்கெட் அணிகள் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சாவகச்சேரி நவீன சந்தையில் அமைந்துள்ள விமலாஸ் வர்த்தக நிறுவனத்தில் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்கும்படி கழகச் செயலர் லயன் கே. நவரத்தினம் அறிவித்துள்ளார். (ஓ-29)

## இராசி பலன்

*28.01.2009*
*(தை15, புதன்கிழமை)*
*அவிட்டம் பிற்பகல் 12.49 மணிவரை*
*துதியை பிற்பகல் 4.34 மணிவரை*
*இராகுகாலம் 12.36-2.06 மணிவரை*
*சுபநேரம் 5.06-6.36 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | போசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, நிலை மாற்றம், தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| இடபம் | நண்பர்கள் உதவி, செய் தொழில் விருத்தி, காரிய நன்மை, சுப நிகழ்வு. |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, தந்தை வழி உறவு, நிர்ப்பந்த நிலை, முயற்சி தாமதம். |
| கடகம் | காரிய தடங்கல், பணக்குறைவு, கலகம், மனச் சோர்வு. |
| சிங்கம் | சுபகாரியம், அபூர்வ சந்திப்பு, குடும் மகிழ்ச்சி, செல்வாக்கு. |
| கன்னி | உடல் நலம், பகைவர் நேசம், சுப நிகழ்வு, நல்ல முயற்சி. |
| துலாம் | பூர்வ புண்ணிய கருமம், பிரயாணம், வியாபார விருத்தி, காரிய இடையூறு. |
| விருச்சிகம் | புதிய விடயம், பெரியோர் உதவி, தாய்வழி உறவு, முயற்சி தாமதம். |
| தனுசு | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, வாகன சுகம், சகோதரர் உதவி. |
| மகரம் | பணவிரயம், காரிய தாமதம், போசன சுகக்குறைவு, குடும்பக் கவலை. |
| கும்பம் | உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி, தெய்வசிந்தை. |
| மீனம் | சுபசெலவு, தொழில் விருத்தி, பிரயாணம், சயன சுகக் குறைவு. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140,180 |
| உருளைக்கிழங்கு | 140 | 120,135 |
| பச்சைமிளகாய் | 300 | 400 |
| தக்காளி | 300 | 500 |
| அவரை | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 |
| கோவா | 130 | 140 |
| கரட் | 100 | 100 |
| பூசணி | 70 | 80 |
| புடோல் | 50 | 50 |
| வாழைக்காய் | 140 | --- |
| சின்ன வெங்காயம் | 100 | 80,120 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 |
| பாகற்காய் | 130 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 120 |
| லீக்ஸ் | 130 | 120 |
| போஞ்சி | 130 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |

(7)



அண்மையில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் கோண்டாவில், கொக்குவில் இணைந்த பாடசாலைகள் சேர்ந்து நடாத்திய கல்வித் தினத்தின் போது தரம் 4 மாணவர்கள், பெற்றோர், சிரேஷ்ட மாணவர்கள் குழுக்களாக வரிசையில் நின்று செயற்திட்ட ஒழுங்குவிதிகளைச் செவிமடுப்பதைப் படத்தில் காணலாம்.

## விசேட தேவையுடைய பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரை அணுகுவதன் மூலம் அப்பிள்ளைகளைப் பொருத்தமான பாடசாலைகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே 5-14 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் வலயக்கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளை பொருத்தமான பாடசாலைகளில் சேர்க்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-7)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் இலங்கை மஞ்சி பிஸ்கற் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் ஆண், பெண் இருபாலர்களுக்குமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றினை வெகு விரைவில் நடாத்தவுள்ளதால் இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்பாக கி. மனோகரன், இல. 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் செயலாளரின் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். (ஓ)

## மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தராக (தற்காலிகம்) நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண் கல்வி, கலாசார விளையாட்டமைச்சு அறிவித்துள்ளது. (ஓ-52)

## கட்டடம் பாவனைக்கு விடப்பட மாட்டாதா?

(யாழ்ப்பாணம்)

கைதடி, நாவற்குழி தெற்கு மகாவிஷ்ணு கடற்றொழில் கூட்டுறவு சங்க மீனவர்களின் பாவனைக்கென கம நெகும திட்டத்தின் கீழ் ரூபா 15 இலட்சம் செலவில் ஓய்வு விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டட வேலைகள் பூர்த்தியாகி 3 மாத காலமாகியும் மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை யென்றும் தாம் தமது பணிகளை இடிந்து விழும் நிலையில் உள்ள பாழடைந்த மண்டபத்திலேயே பல அசௌகரியங்களுடன் முன்னெடுத்து வருவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு அக்கட்டடத்தை தமது பாவனைக்கு விடமாட்டார்களா என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். (ஓ-21)

## உலக சாரணர் தினப்போட்டிகள்

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சி கிளையினரால் சாரணர் இயக்க ஸ்தாபகர் பேடன்பவல் தினமும், உலக சாரணர் தினமும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் குருளைச்சாரணர், சாரணர்கள் ஆகியோரிடையே போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

குருளைச் சாரணர் பிரிவு - 1 க்கு (வயது 7-9) கும்மி நடனம், பேச்சு, புதிர்ப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும்.

குருளைச் சாரணர் பிரிவு - 2க்கு (வயது 10-11) கோலாட்டம், பேச்சு, கட்டுரை, புதிர்ப் போட்டியும்.

சாரணர் பிரிவு -1க்கு (வயது12- 15) நடிப்பு, பேச்சு, புதிர்ப்போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும்,

சாரணர் பிரிவு -2க்கு (வயது 16-18) தாளலயம், பேச்சு, புதிர்ப் போட்டி, கட்டுரை ஆகிய போட்டிகளும் நடத்தப்பட உள்ளது.

இப்போட்டியில் தெரிவு செய்யப்படுவோர் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் சாரணர்கள் மற்றும் குருளைச் சாரணர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு சாரணர் இயக்க மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஓ-29)

## அறுபத்தோராவது காந்தி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் 61 ஆவது காந்தி நினைவு தினம் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவதைத் தொடர்ந்து 171, முதலாம் குறு க்குத் தெருவில் அமைந்துள்ள பணி மனையிலும் பின் நவாலி மத்திய மகா வித்தி யாலயத்திலும் நினைவு தின கூட்டம் நடை பெறும் என காந்திசேவாசங்கம் அறிவித்துள்ளது. (ஓ)

## யாழ்.இந்து மகளிர் கல்லூரியில்

## இலவச தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு பாடசாலை மாணவர்கள் தேவாரப் பண்ணிசையில் ஆர்வமுள்ளவர்களாகத் திகழும் பொருட்டு பாடசாலைகள், ஆலயங்கள் தோறும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளை ஆங்காங்கே நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் பிரகாரம் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் கல்லூரி அதிபர் மற்றும், மன்றத்தலைவர் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல், தேவார இசை மணி கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும்.

இவ் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு விடுமுறைத்தினங்களில் தொடர்ந்து நடைபெற்று வருமெனவும் மாணவர்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## குருநகர் புனித அன்னையின் பெருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ்- குருநகர் புதுமை அன்னையின் வருடாந்தத் திருவிழா கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தேவ நற்கருணை விழாவும் மறு நாள் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். ஆயர் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலியும் மாலை 3 மணிக்கு அன்னையின் திருச்சொரூபப்பவனியும் ஆசீரும் நடைபெறும். நூற்றாண்டு கால பழமை வாய்ந்த இந்த ஆலயம் யாத்திரை ஸ்தலம் என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். (ஓ-72)

## ஊனமுற்றோருக்கான விசேட அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோருக்கான விசேட அடையாள அட்டை கொழும்பு சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது.

இவ்வடையாள அட்டை பெற விரும்பும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊனமுற்றோர் உரிய ஆவணங்களுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டை மனாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆன்மீக சஞ்சிகையின் 133 ஆவது இதழ் வெளியீடு 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். வெளியீட்டுரையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகனும் மதிப்பீட்டுரையை யா/ வல்லை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும் வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் ஞானச்சுடர் சஞ்சிகைக்கு 2006 வைகாசி தொடக்கம் 2008 மார்கழி வரை கட்டுரை வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும். (ஓ-35)

* * *

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் பெப்ரவரி முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் "இதிகாசங்கள்" தொடர் சொற் பொழிவினை தமிழ் ஞான வித்தகர் பொன். சுகந்தன் நடத்தவுள்ளார். (ஓ-35)

## மெய்வன்மைப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் 31 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை அதிபர் எஸ். சுந்தரரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கல்வி நிர்வாக கல்வி அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-52)

## மெய் வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு. செல்வஸ்--தான் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் ந. சண்முகவேல், வித்தியாலய முன்னாள் உப அதிபர் இ. செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)






வலி மேற்கு பிரதேச செயலக கழகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி நிகழ்வினையும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சங்கானை இந்து -இளைஞர் மன்ற விளையாட்டுக் கழக வீரர்களையும், இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட சங்கானை மாவடி விளையாட்டுக் கழக வீரர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கிருஸ்ணா)

# இலங்கையில் தமிழர் 53

### ஆரியரும் திராவிடரும்

பொ.ஆ. முதலாம் ஆயிரவாண்டில் தூரவர்த்தகம் வளர்ச்சியடையத் தொடங்கியதும் வட இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்தும் கிழக்குக் கரையிலிருந்தும் வணிகர்கள் இவ் வர்த்தகத்தில் பங்குகொண்டனர். இதன் விளைவாகத் தென்னாசியாவின் தூர வர்த்தகத்தில் பொது மொழியாகப் பிராகிருதம் எழுச்சிபெற்றது. அதே ஆயிரவாண்டின் நடுப்பகுதியளவில் வைதீக நெறிக்குப் புறம்பான மதங்கள், குறிப்பாக பௌத்தம், சமணம் மற்றும் ஆஜீவிகம் ஆகியவை, எழுச்சிபெற்றபோது அவற்றின் மொழியாகப் பிராகிருதம் முக்கியத்துவம் பெற்றது. மிகப் பழமையான பிராகிருத இலக்கிய மொழியாகிய பாளிமொழி பௌத்த மத நூல்களின் மொழியாகியது பொதுவாக அர்த்தமாகதி எனப்படும் இன்னொரு பிராகிருதம் சமணத்தின் மொழியாகியது. தூர வர்த்தகத்தில் ஈடுபட்டோரும் பௌத்த சமண மதத் துறவிகளும் வட இந்தியாவிலிருந்து தெற்கு நோக்கிச் சென்று ஆதி இரும்புக் காலத்தில் பிராகிருதத்தையும் வேறு புதிய பண்பாட்டுச் செல்வாக்குகளையும் தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தில் பரப்பினர்.

### திராவிடர்

#### திராவிட மொழிகளை அடையாளங் காணல்

வட இந்திய மொழிகளுக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையில் ஒற்றுமை இருப்பதை அவதானித்த பின் இந்து – ஐரோப்பிய மொழிக் குடும்பம் பற்றிய கோட்பாடு உருவாக்கப்பட்டது போல, தென்னிந்தியாவின் மொழிகளுக்கு இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் கண்ட சில அறிஞர்கள் இம்மொழிகளை ஆய்வு செய்து இவை ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற முடிவுக்கு வந்தனர். இம்மொழிக் குடும்பம் திராவிடக் குடும்பம் என்ற பெயரைப் பெற்றது.

மேலும், ஆரியர் என்ற ஓர் இனம் மொழியடிப்படையில் அடையாளங் காணப்பட்டது போல, திராவிட மொழிகளைப் பேசுவோர் திராவிட இனத்தைச் சேர்ந்தோர் எனக் கொண்டு மொழி என்பது இனம் என்பதுடன் சமன்படுத்தப்பட்டது. அத்துடன் இக்கோட்பாட்டை முன் வைத்தோர் ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் திராவிடர் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்தனர் என்பதையும் கூடவே முன்வைத்தனர்.

சமஸ்கிருதத்தில் 'த்ரவிட' என வழங்கும் சொல்லிலிருந்து 1985 இல் ரொபர்ட் கால்டுவெல் ஆங்கிலத்தில் Dravidian என்ற பெயரை உருவாக்கினார். சமஸ்கிருதத்தில் த்ரவிட என்ற சொல் ஒரு மக்கள்குழுவையும் ஒரு மொழியையும் குறிக்கும் சொல்லாகும். இதன் பிராகிருத வடிவங்களுள் ஒன்றாகிய 'தமிள' கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியத்திலும் காணப்படுகின்றது. 'தமெட' 'தமெழ' மற்றும் 'த்ரமிர' என்ற வடிவங்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் 'தமிழ்' என்ற சொல்லின் உறவுச் சொற்கள்.

### மூல திராவிடர்

திராவிட மொழிக் குடும்பம் பற்றிய கோட்பாடு முன் வைக்கப்பட்டதை அடுத்து அறிஞர்கள் இக் குடும்ப மொழிகளின் மூல மொழிக்கு மூல திராவிடம் (Proto - Dravidian) என்று பெயரிட்டு, அதில் இருந்த சொற்களை அடையாளம் கண்டு, அழிந்து போன அம்மொழியை மீளமைப்புச் செய்ய முயன்று வந்துள்ளனர். அத்துடன், அம்மொழியிலிருந்து வழிவந்த பிற்கால மொழிகளைக் காட்டும் குடும்பக் கிளையமைப்பு (Family tree) ஒன்றினையும் உருவாக்கியுள்ளனர். எனினும், இந்து – ஐரோப்பிய மொழிகளில் அறிஞர்கள் காட்டிய ஆர்வத்துடன் திராவிட மொழி ஆராய்ச்சியில் காட்டியுள்ள ஆர்வத்தை ஒப்பிட முடியாது.

திராவிட மொழி ஆய்வில் ஒரு சில மேல் நாட்டு அறிஞர்கள் அண்மைக் காலத்தில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்பதை மறுக்க முடியாது. அவ்வாறே, தென்னாசிய அறிஞ்கள் சிலரும் ஆய்வுகளை நடத்தியுள்ளனர். சிந்துவெளி மக்களுடைய மொழி ஒரு திராவிட மொழியாக இருந்திருக்கலாம் என்ற கருத்தின் காரணமாகவும் திராவிட மொழி தொடர்பான ஆய்வு ஓரளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### திராவிடத்தின் தாயகம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வெளியே ஒரேயொரு திராவிட மொழி தான் அடையாளங் காணப்பட்டுள்ளது. இது பிராஹுய் எனப்படும் மொழி. இம்மொழி பாகிஸ்தானின் பலுச்சிஸ்தான் மாகாணத்திலும் அதற்கு அருகேயுள்ள ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் எல்லைப்புறங்களிலும் பேசப்படுகின்றது. இப்பிரதேசத்துக்கு அப்பால் ஐரோப்பாவில் பேசப்படும் ஊரலிக் மற்றும் அல்டெயிக் மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் காணப்படுவதாக மொழியியலாளர் கருதுவர்.

இதேபோல, ஜப்பானிய மொழியிலும் சில திராவிட மொழிப் பண்புகள் இருப்பதாக அண்மைக் காலத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முற்காலத்தில் மேற்கு ஆசியரவில் பேசப்பட்ட சுமேரிய மொழிக்கும் பிற்பட்ட திராவிட மொழிகளுக்கும் இடையில் சில ஒற்றுமைகள் இருப்பதாகவும் சில அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இத்தகைய கருதுகோள்களின் அடிப்படையில், மூல திராவிட மொழி பேசுவோர் மத்திய ஆசியாவின் ஒரு பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து இன்றைய ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகள் வழியாக வட மேற்கு பக்கத்திலிருந்து இந்தியத் துணைக் கண்டத்துக்கு வந்தனர் என்று சில அறிஞர்கள் கூற முற்பட்டுள்ளனர்.

தற்பொழுது கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு திராவிட மொழிகளுக்கும் வேறிடங்களில் பேசப்படும் மொழிகளுக்கும் இடையில் உறவு இருப்பதையோ மூல திராவிட மொழியின் தாயகத்தை அடையாளம் காண வாய்ப்பு இருப்பதையோ ஏற்க முடியாது.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

எனினும், மூல திராவிட மொழியின் தாயகம் (முதலில் பேசப்பட்ட இடம்) எங்கு இருந்தது என்பது பற்றியும் அம்மொழி எவ்வாறு வேறிடங்களுக்குப் பரவியது என்பது பற்றியும் கருத்துத் தெரிவிக்க அறிஞர்கள் தயங்க வில்லை. திராவிட மொழி ஆய்வில் முன்னணி அறிஞர்களுள் ஒருவராக விளங்கும் ஐரோப்பிய அறிஞர் கமில் ஸ்வெலபில் வெளியிடும் கருத்து இதுவாகும்: திராவிட மொழி பேசுவோர் இந்தியாவுக்கு எந்தச் சூழ்நிலையை இலகுவில் விளக்க முடியாது. இவர்களுக்கும் ஊரல் மலைப் பகுதி, மத்திய தரைப்பகுதி மற்றும் ஈரான் ஆகிய இடங்களில் வாழ்வோருக்கும் இடையில் தெளிவற்ற வகையில் பண்பாட்டு ஒற்றுமைகளும் மொழி ஒற்றுமைகளும் உள்ளன.

(தொடரும்)

# சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பொருளியல் பேராசிரியர் பாலகிருஷ்ணன்

இத்தகைய மேன்மையுடைய புலமையாளர்களுடன் மாணவனாக இருந்த காலத்தில் ஏற்பட்ட தொடர்புகளும் பட்டப்படிப்பு விருத்தியில் முக்கியமாக இருந்துள்ளன. அவர்களில் அநேகமானோருடன் பின்பும், பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலங்களிலும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

இத்தகைய தொடர்புகளும் செல்வாக்குகளும் அவருடைய தொடர்ந்த தொழின்மை விருத்தியில் முக்கிய பங்கினை வகித்தன. பேராதனைப் பல்கலைக்கழக தொழின்மை வாழ்க்கையில் குறிப்பாக கலை, சமூக விஞ்ஞானத் துறைகளில் ஆங்கிலக் கல்வி, தாராண்மை நோக்குடைய ஆய்வறிவு விருத்தி, மார்க்சியவாதம், ஆய்வறிவுசார் விவாதங்கள் ஆகியவை பிரதான செல்வாக்குகளாக மேலோங்கி நின்றன.

இத்தகைய பின்னணியில் மாணவர்களும் ஆசிரியர்களும் அறிவாற்றல் விருத்தியினைத் தேடும் பணிகளில் ஈடுபட்டனர். (பிற்காலங்களில் பல்கலைக்கழகத்தில் தேசிய வாதத்தின் செல்வாக்கும் பலமடைந்து வேறு திசைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன). பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இருந்த காலத்தில் பல்கலைக்கழக மேற்படிப்பு நிதிப் பெறுகையுடன் பிரித்தானியாவின் Leeds பல்கலைக்கழகத்தில் அவர் தமது மேற்படிப்பை மேற்கொண்டார்.

அங்கு அபிவிருத்திப் பொருளியலில் மேம்படுத்தும் பயிற்சியினை மேற்கொண்டதுடன், இலங்கையின் பொதுநிதி தொடர்பான ஆய்வின் அடிப்படையில் M.Phil பட்டத்தினை பெற்று பேராதனைக்குத் திரும்பினார். பின்னர், 1978 வரை முதுநிலை விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றினார்.

1972-1976 பட்டத்தினை பெற்று பேராதனைக் குத் திரும்பினார். பின்னர், 1978 வரை முதுநிலை விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றினார்.

1972 - 1976 காலப்பகுதியில் அவருடைய பொருளியல் மாணவனாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கும் என்போன்றோருக்கும் கிடைத்தது. நானும் என்போன்றவர்களும் இதனை ஒரு நற்பேறுடைய காலகட்டம் என்றே கருதியுள்ளோம். என்போன்ற பல தலைமுறைபட்ட முன் மாணவர்களுக்கு, பொருளியல் ஆய்வு, நாணயப் பொருளியல், பிரயோகப் பொருளியல், பொருளாதாரத் திட்டமிடுதலும் அபிவிருத்தியும் ஆகிய கற்கைகளைப் போதித்து வந்துள்ளார். விரிவுரைகள் நடாத்துவதில் அவருக்கு இருந்த ஈடுபாடு, ஆற்றல், விடயங்களைப் பற்றிய சிந்தனைத் தெளிவு, விளக்




கும் திறன் ஆகியவை அவரிடம் கற்ற மாணவர்கள் நன்கு அறிவர். தமது பாடநெறியின் விசாலமான, ஆழமான அறிவுத் திரட்டு என விளங்கியவர்.

தெளிவான சிந்தனையுடன் ஆராய்ந்து முடிவு சொல்லும் திறனும், அந்தந்தக் காலத்திற்கு ஏற்ற வகையிலான நோக்கும் அவ்வக் காலங்களில் கிடைக்கப்பெற்ற ஆய்வுகளை மேற்கோள்காட்டி பாடநெறிகளைக் கற்பித்து வந்த முறையும், அவருடைய பாடநெறிகளின் தரவுகளை காலத்துக்குக்காலம் இற்றைப்படுத்தும் தன்மையும் அவரிடம் நிறைந்திருந்ததனை எங்களால் அறிய முடிந்தது. அவருடைய ஈடுபாடும், மாணவர்கள் நலன் கருதிய செயற்பாடுகளும், வகுப்பறைக்கு

சேவை நயப்பு 2

அப்பாலும் சென்றுள்ளதனைக் கண்டுள்ளோம்.

இவை மாணவர்கள், அவர் மீது கொண்ட மதிப்பினை உயர்த்தியுள்ளது. அவருடைய சிறந்த தனித்துவமான குணாம் சங்கள், கற்பித்தல் திறமை, ஆற்றல், விருத்தி மற்றும் ஆளுமை என்பவற்றை அவரிடம்கற்றமாணவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அறுபதுகளில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில், அரசாங்க கொள்நெறிப் பணிப்புரைக்கு ஏற்றவாறு தாய் மொழி (சிங்களம்/தமிழ்) மூலம் கற்பித்தல் தொடக்கப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகமும் இம் முக்கிய மாற்றத்தைத் தழுவியது.

இந்த நடைமுறையை பல துறைகளில் பின்பற்றியபோது சில பிரச்சினைகள் எதிர் நோக்கப்பட்டன. தமிழில் பொருளியல் கற்பித்தலில் ஆரம்பகட்டங்களில் பேராசிரியர் பாலகிருஷ்ணன் அதிகளவான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவராவர். தாய் மொழிக் கல்வி பல்கலைக்கழக மட்டத்தில் அறுபதிகளிலிருந்து பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இம் மாற்றத்தின் முன்னோடிகளில் ஒருவராக அவர் பங்கேற்றவர் என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

அன்று தாய்மொழி மூலம் கல்வி கற்று வெளியேறிய பல்கலைக் கழக மாணவர்கள் பலர் இன்று உயர் பதவிகளிலிருப்பதனைப் பற்றி அவர் அடிக் கடி எடுத்துக் கூறுவதுண்டு. இது தொடர்பாக அவர் வலியுறுத்தி கூறியுள்ள விடயம் என்னவெனில், நூல்கள் வாசிப்பதற்கான ஆங்கில அறிவும், திறமையும், தேர்ச்சியும் போதியளவு ஆர்வமும் ஈடுபாடும் இருக்குமானால், தாய்மொழி மூலம் கற்கும் மாணவர்கள் முன்னிலைக்கு வரும் தகுதியுடையவர்கள் என்பதாகும்.

பேராசிரியர் பசுபதி சிவநாதன்
பொருளியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் அவர்கள் 1978 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். இது அவருடைய தொழில்சார் வாழ்க்கையில், அடுத்த முக்கிய கட்டத்தினைக் குறிப்பிடுகின்றது.

எழுபதுகளிலும், எண்பதுகளிலும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து புலமையாளர்கள் பலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விரும்பிச் சென்றனர்.

இத்தகைய பேராசிரியர்கள், புலமையாளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் வருகை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

(தொடரும்)

# இலங்கைத் தமிழர்களுக்கு உரிய அரசியல் அங்கீகாரம் கிடைக்க மத்திய அரசு பாடுபடும்

## காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வி. தங்கபாலு

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்கு உரிய அரசியல் அங்கீகாரம் கிடைக்க மத்திய அரசு பாடுபடும் என்று காங்கிரஸ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கே.வி. தங்கபாலு கூறினார்.

குடியரசு தினவிழா இந்திய அரசின் 60ஆவது குடியரசு தின விழா தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகமான சத்திய மூர்த்தி பவனில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் இனம் எங்கிருந்தாலும் வாழ வைப்போம் இலங்கை தமிழர்களுக்காக மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி கொண்டு வந்த ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம் நிறைவேற பாடுபடுவோம்.

இலங்கை ஈழத்தமிழர்களுக்கு சரியான பாதுகாப்பு வாழ்வுரிமை உரிய அரசியல் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி விரும்புகிறார். மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசும் அதற்காக பாடுபட்டு வருகிறது என்றார். (ஓ-5)

# இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சென்னை)

இலங்கையில் தமிழ் மக்களை காப்பாற்ற மத்திய மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயலாளர் திருநாவுக்கரசர் கூறினார்.

சென்னையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது,

இலங்கையில் நம் தொப்புள் கொடி உறவுகளான தமிழின மக்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கையில் தமிழ் மக்களை காப்பதற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இலங்கையில் சுமார் 4 இலட்சம் மக்கள் காடுகளில் உணவு உடை இன்றி மிருகங்களை போல வாழ்ந்து வருகின்றனர்.

எனவே தமிழ் மக்களை காப்பாற்ற மத்திய அரசும் தமிழக அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ஓ-5)

### ஈரோடு வந்த பீரங்கிகள்



இந்திய அரசால் இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்ட பீரங்கிகள் டில்லியில் இருந்து திருவனந்தபுரத்திற்கு ஈரோடு வழியாக ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டன. ஈரோடு ரயில் நிலையம் வந்த பீரங்கிகளை படத் தில் காணலாம். (இப்படம் 26ஆம் திகதி தினந்தந்தியில் பிரசுரமாகியது) இப்படம் வெளியானதை அடுத்து தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது.

## ம.தி.மு.காவின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 13ஆம் திகதி

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசைத் தலையிடுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 13ஆம் திகதி மறுமலர்ச்சி திரா விட முன்னேற்றக்கழகம் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்த உணவுத்தவிர்ப்புப்போராட்டம் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தலைமையில் இடம்பெறவுள்ளதாக மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-4)

## இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு உண்டியல் பணத்தை ஈந்த மாணவிக்கு பாராட்டு

(தூத்துக்குடி)

உண்டியல் பணத்தை இலங்கை தமிழர் நிவாரண நிதிக்கு வழங்கிய மாணவி ராமலட்சுமி பாரதிக்கு குடியரசு தினவிழாவில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டம் ஆதிகுமர குருபர சுவாமிகள் அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவி ராமலட்சுமி பரதி (10) பெற்றோர்கள் தரும் பொக்கெட் மணியை வீணாக செலவழிக்காமல் உண்டியலில் சேகரித்து அதை பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவார். அதன்படி 2004இல் சுனாமி நிவாரண நிதி 432 ரூபாய் 2005இல் தமிழக புயல் வெள்ள நிவாரண நிதி 261 ரூபாய் சமீபத்தில் இலங்கை தமிழர் நிவாரண நிதியாக 494 ரூபாய் பீகார் வெள்ள நிவாரண நிதி 494 ரூபாய் அனுப்பியுள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று முன்தினம் நடந்த குடியரசு தினவிழாவில் கலெக்டர் பழனியாண்டி உண்டியல் பணத்தை நிவாரண நிதிக்காக கொடுத்த மாணவி ராமலட்சுமி பாரதியை பாராட்டி சான்றிதழ் வழங்கினார். (ஓ-5)




# இலங்கைத் தமிழர் பிரச்சினையை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் 'வம்சவதம்' நாடகம்

(நெல்லை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான காரணங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நெல்லையில் வம்சவதம் என்னும் தலைப்பில் தமிழ் நவீன நாடகம் ஒன்று அரங்கேற்றப்பட்டுள்ளது.

மூன்றாம் அரங்கு. அமைப்பு சார்பில் கடந்த ஞாயிறன்று நெல்லை சந்திப்பு மேல் நிலைப்பள்ளியில் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது.

பேராசிரியர் தொ. பரமசிவன் சிறப் புரையாற்றினார். நாடக நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாதுமாகி அமைப்பினர் மேற்கொண்டிருந்தனர்.

இயக்குநர் கருணா பிரசாத்தின் இயக்கத்தில் உருவான இந்த நாடகம் சுமார் 20 நிமிடங்களைக் கொண்டது.

வழக்கமான அரங்க அமைப்பாக இல்லாமல் நாடக் கலைஞர்கள் பொதுமக்கள் மத்தியில் தங்களது பாத்திரங்களை வெளிப்படுத்தியமை இந்த நாடகத்தின் தனிச் சிறப்பாகும். (ஓ-5)

# பயங்கரவாதம் ஒழிய இளமையில் இருந்து அனைவரும் ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டும்

## வாழுங்கலைப் பயிற்சி நிறுவுனர் -ரவிசங்கர்ஜி

(சென்னை)

தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகள் சுய நலவாதிகள் என வாழும் கலை பயிற்சியின் நிறுவுனர் ரவிசங்கர்ஜி கூறினார். இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்துக்கு நேற்று முன்தினம் பகல் 12 மணிக்கு தனி ஹெலிகொப்டரில் வந்த அவர் நிருபர்களி



டம் கூறியதாவது, பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் பல முறை அழைப்பு விடுத்தோம். இரு தரப்பும் ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

இருப்பினும் தொடர்ந்து நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். விரைவில் இலங்கை சென்று மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க உள்ளோம். போரால் எதையும் எப்போதும் வெல்ல முடியாது. ஆனால் மதியால் வெல்ல முடியும் தமிழக அரசியல்வாதிகள் சுய நல வாதிகள் தங்கள் வசதிக்கேற்ப இலங்கைப் பிரச்சினையைக் கையாள்கின்றனர்.

மத்திய அரசு இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இங்கு வந்திருக்கும் அக திகளை அவர்களது நாட்டுக்கு அனுப்புவதற்கு இந்திய அரசு உதவிட வேண்டும்.

வங்கதேசத்திலிருந்து வரும் அகதிகளுக்கு மத்திய அரசு ரேஷன் காட் வழங்குகிறது.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு வழங்குவது இல்லை. இதிலும் பாகுபாடு காட்டப்படுகிறது. பயங்கரவாதத்தை ஒழிக்க இளம் பருவத்திலிருந்து அனைவரையும் ஆன் மீகத்தில் ஈடுபடுத்த வேண்டும் இவ்வாறு ரவி சங்கர்ஜி தெரிவித்தார்.

மண்டபம் அகதிகள் முகாமுக்குச் சென்ற ரவிசங்கர்ஜி அங்கிருந்தவர்களுக்குப் புதிய துணிகள் வழங்கி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். (ஓ-5)

# சூரிய கிரகணம் சென்னையில் 1 1/2 மணி நேரம் தெரிந்தது பில்லா கோளரங்கத்தில் மக்கள் ஆர்வத்துடன் பார்த்தனர்

(சென்னை)



சென்னையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.28 மணி முதல் மாலை 4.05 மணி வரை சூரிய கிரகணம் ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்காக மக்கள் ஏராளமான பேர் பிர்லா கோளரங்கத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நீண்ட வரிசையில் காத்திருந்தனர். சென்னையில் சரியாக நேற்று பிற்பகல் 2.29 மணிக்கு சூரிய கிரகணம் ஏற்பட்டது. சூரியனின் தெற்கு பகுதி கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது.

சூரிய கிரகணத்தைப்பொது மக்கள் நேரில் பார்ப்பதற்கு வசதியாக பிர்லா கோளரங்கத்தில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 4 தொலை நோக்கிகள் (டெலஸ்கோப்) சூரிய ஒளியின் பிம்பத்தைக்காட்டும் சோளார் ஸ்பாடர்ஸ் (சன் ஸ்பாடர்) கருவியும், வெல்லர் கிளாஸ் நம்பர் 14 ஆகிய நவீன கருவிகள் வழியாக சூரிய கிரகணத்தை பொது மக்கள் பார்த்தனர்.

வெல்டஸ் கிளாஸைக் கொண்டு சூரியனைப் பார்த்த போது அது ஒரு மாங்காயை போல பச்சை நிறத்தில் காட்சியளித்தது. சூரியனின் ஒருபகுதி வெட்டப்பட்டிருப்பதைப் போல தோன்றியது. இந்த சூரிய கிரகணத்தை பெண்கள் குழந்தைகள் பள்ளி மாணவ மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் பார்த்த வியந்தனர்.

சூரிய ஒளி வடி கட்டி எனப்படும் வெல்டஸ் கிளாஸ் மூலம் சூரியனைபார்க்கும் போது சூரிய ஒளி ஒருலட்சம் மடங்கு குறைத்து காண்பிக்கப்படும். இதனால் கண்களுக்கு எந்த பாதிப்பும் வராது. வெறும் கண்ணால் பார்த்தால் பார்வையிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. என்று தமிழ் நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குனர் பி. அய்யம் பெருமாள் கூறினார். இது பற்றி அவர் மேலும் கூறியதாவது. விண்ணில் சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் நிகழ்வுதான். சூரிய கிரகணம் ஆகும். அப்போது சூரிய ஒளி பூமியில் விழாமல் சந்திரன் தடுக்கும். சூரியகிரணத்தில் முழு சூரிய கிரகணம் பகுதி சூரியகிரகணம் கங்கண மோதிர வளையத்தைப் போன்ற சூரியகிரகணம் என்று மூன்று வகைகள் உள்ளன.

நேற்று தோன்றியது கங்கண சூரிய கிரகணம் ஆகும். இது தெற்கு ஆபிரிக்கா கடற்கரையில் தொடங்கி இந்திய பெருங்கடல் வழியாக நகர்ந்து சுமத்ரா புருனே தீவுகளில் முடிவடைந்தது. இந்திய நேரப்படி நேற்று காலை 10.36 மணிக்கு சூரியகிரகணம் தொடங்கி மாலை 4.05 மணிவரை நடந்தது. தென்னிந்தியாவைப் பொறுத்த வரை எல்லா இடங்களிலும் சூரியகிரகணத்தைக் காண முடிந்தது.

சென்னையைப் பொறுத்தவரை இது பகுதி சூரியகிரகணமாகவே தெரிந்தது. சென்னையில் சரியாகப் பி.ப 2.29 மணிக்கு தொடங்கிய சூரிய கிரகணம் மாலை 4.05 மணிவரை நீடித்தது. உச்சக்கட்டமாக 3.19 மணிக்கு சூரி யனை சந்திரன் 7 சதவீதம் அளவுக்கு மறைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

சென்னை மட்டுமில்லாமல் கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, பெங்களூர், திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலும் கொல்கத்தா மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் சூரியகிரகணத்தை பார்க்க முடிந்தது. வரும் ஜூலை மாதம் 22ஆம் திகதி 100 சதவீதம் அளவுக்கு சூரியனை சந்திரன் மறைக்கும் முழு சூரிய கிரகணம்என்ற அரியநிகழ்வுநடைபெறவுள்ளது. இவ்வாறு அய்யம் பெருமாள் கூறினார். (ஓ-5)

# ஒரே போட்டியில் 6 காளைகளை அடக்கி 11 வயது சிறுவன் சாதனை

காளை மாடு அடக்கும் போட்டியில் கலந்து கொண்ட 11 வயது சிறுவன் ஒருவன், தனியொரு போட்டியில் 6 காளைகளைக் கொன்று உலக சாதனை படைத்த சம்பவம் மெக்ஸிக்கோவில் இடம் பெற்றுள்ளது.

காளை அடக்கும் போட்டியில் கலந்து கொண்டு வியக்கத்தகு விதத்தில் தனது வீரத்தை வெளிப்படுத்திய மிசெலிடோ லாகி ரேவியர் பினிசியின் இந்த சாதனையை உள்ளடக்கிய வீடியோ காட்சி, 'கின்னஸ்' உலக சாதனைப் புத்தக பதிவிற்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

தனது 4 ஆவது வயதில் முதன் முதலாக காளையொன்றை வெற்றிகரமாக அடக்கிக் கொன்ற மிசெலிடோ, தொடர்ந்து உலகெங்கும் நடைபெற்ற சர்வதேச காளை அடக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது.

மெரிடாவில் நடைபெற்ற காளை அடக்கும் போட்டியில் கலந்து கொண்டு உலக சாதனை படைத்துள்ள மிசெலிகோ விபரிக்கையில்.



"இந்த மாபெரும் வெற்றியை அடையமுழந்ததை இட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்" என தெரிவித்தான்.

இந்நிலையில் மிருகவதைக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைப்புகளும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களும் மேற்படி சிறுவனின் சாதனைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

மிகவும் உயிராபத்து மிக்க போட்டியொன்றில் 18 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் பங்கேற்பது சட்ட விரோதமானது எனவும் மிசெலிடோவின் இந்த சாதனையை மெரிடா நகரமேயர் இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அந்த அமைப்புக்கள் வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது. (ஓ-5)

# இலங்கையில் ராஜபக்ஷ அரசின் நடவடிக்கையை ஆதரிக்க முடியாது

## ஜப்பான் நாட்டு தூதுவர் எஸ்.யூ.சி. தெரிவிப்பு

இலங்கையில் தமிழின் படுகொலையில் ஈடுபட்டு வரும் ராஜபக்ஷ அரசின் நடவடிக்கையை ஒருபோதும் ஆதரிக்க முடியாது என்று ஜப்பான் நாட்டு சிறப்பு தூதுவர் எஸ். யூ.சி. தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்து நீடிக்கிறது. முல்லைத்தீவில் 4 இலட்சத்திற்கும் மேலான தமிழர்கள் போரில் சிக்கி தவித்து வருகின்றனர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை சென்றுள்ள ஜப்பான் சிறப்பு தூதர் எஸ்.யூ.சி. அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இலங்கை அரசின் நடவடிக்கையை அவர் பாராட்டியதாக புகார் எழுந்தது.

இந்நிலையில் ஜப்பான் நாட்டு சிறப்பு தூதுவரை, இலங்கை நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டோர் சந்தித்துப் பேசினர்.

அப்போது ராஜபக்ஷ அரசை பாராட்டியது தொடர்பாக தமது கவலையை அவர்கள் வெளியிட்டனர். இதற்கு பதில் அளித்து பேசிய ஜப்பான் சிறப்பு தூதுவர், நான் ஒருபோதும் இலங்கை அரசை பாராட்டி பேசவில்லை. இலங்கையில் தமிழர்கள் உரிமைகளை பெற்று அமைதியாக வாழ வேண்டும் என்பதையே ஜப்பான் அரசு விரும்புகிறது என்று உறுதிப்பட தெரிவித்தார். (ஓ-5)

# பின்லேடன் பதுங்கி இருக்கும் இடம் தெரிந்தால் பாகிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும்

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவிப்பு

பாகிஸ்தானில் அல்கொய்தா தலைவர் பின்லேடன் பதுங்கி இருக்கும் இடம் பற்றிய தகவல் கிடைத்தால், பாகிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்தார்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் வசீரிஸ்மான் பகுதியில் அல்கொய்தா தீவிரவாதிகள் பதுங்கி இருக்கும் முகாம்கள் மீது அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 22 பேர் பலியானார்கள்.

அமெரிக்காவின் ஏவுகணை தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் பாகிஸ்தான் அரசு, இப்போது இந்த தாக்குதலை தடுத்து நிறுத்தும்படி ஒபாமாவை கேட்டுக்கொண்டது. முந்தைய அரசாங்கத்தின் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படுவதாகவும் பாகிஸ்தான் கூறி இருந்தது.

ஏவுகணை தாக்குதலுக்கு ஒபாமா தான் உத்தரவிட்டார் என்பது இப்போது தெரிய வந்து உள்ளது. ஒபாமா ஜனாதிபதியாக பதவி ஏற்ற 4-வது நாள் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் ஒபாமாவுடன் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது ஏவுகணை தாக்குதல் நடத்தும்படி ஒபாமா தான் உத்தரவிட்டார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

மேலும் அவர் இராணுவ அதிகாரிகளிடம் கூறுகையில், பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் இடம் பற்றி உளவு தகவல் கிடைத்தால் பாகிஸ்தானின் உள்பகுதியிலேயே குண்டு வீசி தாக்குதல் நடத்தவும் தயாராக இருப்பதாகவும் ஒபாமா கூறினார். எல்லையோரத்தில் உள்ள தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தவறினால், அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-5)

# மிசெல் ஒபாமா அமெரிக்காவின் 'டயானா'

## பிரித்தானிய பத்திரிகை வர்ணிப்பு



(பிரித்தானியா) அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவியான மிசெல்ஒபாமா, அமெரிக்காவின் டயானா என பிரித்தானிய பத்திரிகையொன்று விமர்சித்துள்ளது.

"பிரித்தானிய இளவரசி டயானாவின் மறைவுக்குப் பின் சமூகத்தின் உயர் மட்டத்தில் அத்தகைய கவர்ச்சிகரமான வகிபாகம் வகிக்கும் முன் மாதிரியான ஒருவர் இல்லாமல் இருந்தது. அந்த வகையில் அமெரிக்க முதல் பெண்மணி நவநாரிக உலகை வியப்பு கலந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கியுள்ளார்'' என பிரித் தானிய 'சண்டே ரைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.



மிசெல் ஒபாமா ஏற்கனவே பிரான்ஸ் ஜனாதிபதி நிகொலஸ் சார்க்கோஸியின் மனைவியும் மொடல் அழகியுமான கார்லா புரூணியுடன்ஒப்பிட்டு பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும், டயானாவைப் போன்றல்லாமல், மிசெல் ஒபாமாநவநாகரிக ஆடைகளில் முன்மாதிரியாக திகழ்வதில் காட்டும் அக்கறையை விட வெள்ளை மாளிகையிலான தனது வகிபாகம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகிறது. (ஓ-5)

# இறந்து போன சிசுவை 60 ஆண்டு சுமந்த மூதாட்டி

சீனாவைச் சேர்ந்த 92 வயது மூதாட்டி, இறந்துபோன சிசுவை 60 ஆண்டுகளாக தன் வயிற்றில் சுமந்திருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் ஹுவாங் கிலவோடன் பகுதியை சேர்ந்தவர் ஹுவாங்யிஜுன். இவர் 60 ஆண்டுகளுக்கு முன் 1948இல் கர்ப்பம் தரித்தார். அதன் பிறகு குழந்தை பிறக்கவே இல்லை. தொடர்ந்து உப்பிய வயிற்றுடனே வசித்து வந்தார். சமீப காலமாக அவருக்கு கடும் வயிற்று வலி ஏற்பட்டது. பரிசோதனைக்காக டாக்டர்களிடம் சென்றார். அப்போது ஹுவாங்கின் கருப்பையில், இறந்த நிலையில் சிசு இருப்பதைப் பார்த்து டாக்டர்கள் அதிர்ந்தனர்.

"அதை ஏன் அகற்றவில்லை?" என்று டாக்டர்கள் கேட்ட போது, ஹுவாங் சொன்ன பதில் டாக்டர்களை மேலும் அதிர வைத்தது. "கர்ப்பத்தில் இறந்த சிசுவை அகற்ற சென்ற போது அதற்கு கட்டணமாக 60 ஆண்டுக்கு முந்தைய மதிப்பில் 4000 ரூபாய் கேட்டதாகவும் அவ்வளவு பெரிய தொகையை தன்னால் செலுத்த முடியாது என்பதால் அந்த முயற்சியை கைவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மீது இரக்கப்பட்ட டாக்டர்கள் இலவசமாகவே அறுவை சிகிச்சை செய்து, கருப்பையில் 60 ஆண்டுகளாக இறந்த நிலையில் இருந்த சிசுவின் உடலை அகற்றினர். தற் போது உடல் நிலை தேறி வருகிறார் ஹுவாங். (ஓ-5)

# இந்தியர்களுக்கு சிறந்த நண்பர்கள் அமெரிக்கர்களே இந்திய குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் ஒபாமா



(வோஷிங்டன்)

அமெரிக்க மக்களை விட இந்தியர்களுக்கு சிறந்த நண்பர்கள் மற்றும் பங்குதாரர்கள் யாரும் இருக்க முடியாது என, அந்நாட்டின் புதிய அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின்60 ஆவது குடியரசு தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, இந்தியாவையும், இந்தியர்களையும் வாழ்த்தி, அமெரிக்க அதிபர் ஒபாமா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி விவரம் வருமாறு ; இந்தியர்கள் நேற்று முன் தினம் குடியரசு தினத்தை நாடு முழுவதும் கொண்டாடினர். அமெரிக்க மக்களை விட தங்களுக்கு சிறந்த நண்பர்கள் மற்றும் பங்குதாரர்கள் இல்லை என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். குடியரசு தினத்தைக் கொண்டாடும் இந்த நேரத்தில், அமெரிக்க மக்களின் சார்பில் இந்தியர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் ஜனநாயகம், சுதந்திரம், பன்முக கலாசாரம் மற்றும் மத சகிப்புத்தன்மை மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் கொண்டாடுவோம்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு, கடந்த 10 ஆண்டுகளில் பெருமளவு வளர்ச்சி அடைந்துள்ளது. ஒவ்வொரு துறையிலும்இரு நாடுகளும் பரந்த மற்றும் துடிப்பான பங்களிப்பை மேம்படுத்தி வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே ஆழமாகவும், வேகமாகவும் வளர்ந்து வரும் இந்த நட்புறவு, அனைத்து உலக மக்களுக்கும் பயனளிப்பதாக அமையும்.

இரு நாட்டு விஞ்ஞானிகளும் ஒன்றாக இணைந்து சுற்றுச்சூழல் சவால்க ளைத் தீர்ப்பர். நமது டாக்டர்கள் புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பர்.

நமது பொறியாளர்கள் நம் சமூகத்தை நவீனமயத்திற்கு கொண்டு செல்வர். நமது முதலீட்டாளர்கள் நாட்டை வளப்படுத்துவர். நமது கல்வியாளர்கள், எதிர்கால சந்ததிக்கு தேவையான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பர்.

உலகில் அமைதி, செழுமை மற் றும் நிலைத்தன்மை நீடிக்க நமது இரு அரசுகளும் இணைந்து செயல்படும் என்றும் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் நலம் பெற்று பணிக்கு திரும்ப வேண்டும் என்றும் அதிபர் ஒபாமா வாழ்த்தியுள்ளார். (ஓ-5)



இந்தோனேசியாவில் நேற்று மாலை இடம் பெற்ற சூரிய கிரகணத்தை படத்தில் காணலாம்.

## சமாதான தொடர்பாடல் வேலைத்திட்டம்

அரச பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் சமூக இணக்கம், ஒருமைப்பாடு என்பனவற்றை ஏற்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 51 பாடசாலைகளில் சமாதான தொடர்பாடல் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் சமாதானக் கல்விப் பிரிவு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மூவின மக்களும் கலந்து கொள்ளும் வகையில் 15 கல்வி வலயங்களில் இருந்து மேற்படி பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களிலும் மேற்படி பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வேலைத்திட்டத்தில் பங்குபெறவுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை தேசியக் கல்வி நிறுவகம் தற்போது வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்ப சர்வதேசம் முன்வர வேண்டும்

## தே.சு.மு.எம்.பி.பியசிறி விஜேநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு சர்வதேசமும் வெளி நாடுகளில் வாழும் இலங்கையர்களும் முன்வர வேண்டும் என்று தேசியச் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிய சிறி விஜேநாயக்க தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் இறுதித் தளமாகக் காணப்பட்ட முல்லைத்தீவையும் கைப்பற்றி இராணுவ வீரர்கள் தாய் நாட்டுக்கான கடமையினை நிறைவேற்றியுள்ளனர். இனி மேல் அரசாங்கத்தினதும் அரசியல் தலைவர்களதும் கடமையே எஞ்சியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

தேசிய சுதந்திர முன்னணியின் விசேட செய்தியாளர் மாநாடு கடந்த திங்கட்கிழமை பத்தரமுல்லையில் உள்ளகட்சியின் தலைமையலுவலகத்தில் நடை பெற்ற போதே பிய சிறி விஜேயநாயக்க எம்.பி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர்மேலும் தெரிவித்ததாவது, புலிகளுக்குஎதிரான யுத்தத்தில் இராணுவ வீரர்கள்இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளனர். புலிகளின் மிகமுக்கிய நகரமும் படைக்களமுமான முல்லைத்தீவையும் இராணுவ வீரர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இதை வெறுமனே ஒரு செய்தியாக எண்ணி விட முடியாது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை ஈட்டித் தந்த இராணுவ வீரர்கள் மற்றும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ உட்பட இராணுவத் தளபதி,பாதுகாப்பு செயலாளர் ஆகி யோருக்கு நன்றியையும் தேசிய கௌரவத்தையும் வழங்க வேண்டும்.

இராணுவ வீரர்கள் தாய்நாட்டிற்கான தமது கடமைகளை இனிதே நிறை வேற்றியுள்ளனர்.தற்போது எஞ்சியிருப்பது அரசாங்கத்தினதும் அரசியல்தலைவர்களினதும் உண்மையான தேசப் பற்றுடையவர்களினதும் தாய் நாட்டிற்கான கடமையேயாகும். வடக்கு மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தையும் அபிவிருத்தியையும் வழங்கி அம்மக்களை வாழ்க்கைத் தரத்தில் மேம்படுத்த வேண்டும்.

வடக்கு பிரதேசத்தில் சிறந்த விவசாயிகளும் புத்தி ஜீவிகளும் உள்ளனர். எனவே இவர்களினது பங்களிப்பை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். வடக்கிற்கான புகையிரத சேவையை ஆரம்பிக்க அரசாங்கம் துரித நடவடிக்கையெடுக்க வேண்டும். குறிப்பாக யுத்த பாதிப்புக்குள்ளான மக்களின் நலன்களை விசேடமாக கருத்தில் கொண்டு அப்பிரதேச மக்களுக்கு கல்வி,சுகாதாரம், வீடு போன்ற வசதிகளை வழங்க அரசாங்கமும் சர்வதேச அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் அரசாங்கத்தினால் மேற கொள்ளப்படும் நல்லாட்சியையும் சீர் குலைக்க முயற்சிக்கும் சூழ்ச்சிக்காரர்களை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும். குறிப்பாக ஐ.தே.க. வின் மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளர் எஸ். பி. திசாநாயக்க தம்மிடம் படை இருப்பது போன்று கருத்துக்கள் வெளியிட்டுள்ளார்.

எனவே இக்கருத்தானது எதிர்வரும் தேர்தல்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வண்டுகொல்லி/சீமை அகத்தி

Botanical Name-Cassia alata
Family- Caesalpiniaceae
Engl- Winged senna/Ringworm shrub
Sinh-Et-tora.

மெல்லிய சுணைகளையுடைய புதர்ச் செடி; சிறுகாம்புகளையுடைய தனியிலைகள் கொண்டது. மளமளப்பான மேற் புறத்தையும் அடியில் சிறு உரோமங்களையும் கொண்டது.நீளமுடைய காம்புகளை உடையவை. பெரிய மஞ்சள் நிறமுடைய மலர்களைக் கொண்டவை. சமமற்ற மகரந்தத் தாள்கள் உடையவை. கனிகள் நீண்டு, மெல்லிய படலம் போன்று வெடித்துச் சிதறக் கூடியவை. 10-20செ.மீநீளம் உடையவை. ஐப்பசி மாதம்முதல் மாசி மாதம் வரை மலர்களைக் காணலாம். மார்கழியில் கனிகள் காணப்படும்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

யாழ் மாவட்டத்தில் வீடுகள், தோட்டங்களில் அழகிற்காக வளர்க்கின்றார்கள். சில இடங்களில் காட்டியல்பாக வளரும் . விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பிரயோகங்கள்:**

✦ மலக்கட்டு உள்ளவர்கள் வண்டு கொல்லி இலையின் குருத்திலைகள் 2 எடுத்து சிறுகச் சிறுக அரிந்து நெய்யில் வதக்கி 1மேசைக் கரண்டியளவு உள்ளெடுக்க மலம் நன்கு கழியும்.

✦ வண்டு கொல்லி இலைச் சாற்றை தேமலின் மீது தடவ இந் நோய் தீரும்.

✦ தலையில் ஏற்படும் புழுவெட்டுக்கு வண்டு கொல்லி இலை, மருதாணி இலைகளை எலுமிச்சம்பழசாறு விட்டு அரைத்து தேய்த்து தலை முழுகி வர தீரும்.

✦ வண்டு கொல்லி இலைச் சாற்றை, எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து இரண்டு வாரம் பூசி வர வட்டக் கடி தீரும். இதன் ஆங்



கிலப் பெயர் Ring worm shrub என்பது குறிப்பிடத்தக்கது.

✦ சீயக்காய், வெந்தயம், கடலைப் பருப்பு, பச்சைப்பயறு ஆகியவற்றை சம அளவு எடுத்து தூளாக்கி வைத்துக் கொண்டு அதில் கொஞ்சம் தண்ணீர் விட்டு குழப்பி உடலில் பூசிக் குளித்த பின்பு இவ் இலைச் சாற்றை எலுமிச்சம்பழச்சாறுஅல்லது கற் சுண்ண தெளி நீர் விட்டரைத்து மேலுக்குப் பூச படர்தாமரை தீரும். அல்லது இதன் வேரையும் எலும்மிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துபடர் தாமரைக்கு பூசலாம்.

✦ பொதுவாக பங்கசு கிருமிகளால் ஏற்படும் தோல் நோய் தொற்றுக்களுக்கு இதன் இலைகளை அரைத்து தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணையில் குழப்பி பூசலாம். அல்லது2 பங்கு தேன் மெழுகுடன்5பங்கு தேங்காயெண்ணெய் சேர்த்து கரண்டியிலிட்டுத் தீயில் உருக்கி, சூடு மெழுகு போல கிண்டி மேலுக்கு தடவித் தேய்த்த பின்பு குளிக்கலாம்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

✦ இதன் இலைகளைக் குடிநீரிட்டு 30 தொடக்கம் 60மி.லி காலை , மாலை கொடுக்க ஊறல் எடுத்து வருகின்ற தோற்படை நோய்கள் நீங்கும்.

✦ இதன் இலைகளை அதிகமாகப் போட்டு வேகவைத்த நீரில் கழுவ, படை , சொறி, சிரங்கு விரைவில் ஆறும்.

✦ இதன் பூக்களை குடி நீரிட்டு கொடுக்க இருமல், ஆஸ்மா தணியும்.

குறிப்பு- இதன் இலைகளை உள்ளுக்கு சாப்பிடும் அளவு அதிகப்படின் மலம் போக்கும். மறுமுறை அளவைக் குறைத்துக் கொள்க.


**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி-யாழ்ப்பாணம்**
**புதிய மாணவர்களிற்கான அனுமதி கோரல்-2009**

கற்கை நெறி: DAM (Diploma in Ayurvedic Medicine)

கல்விக்காலம் :- 5 வருடம்

அடிப்படைக் கல்வித்தகைமை:-

1.க.பொ.த.உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவு 3 பாட சித்தி
2.பரம்பரையாயின் க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலைப்பிரிவுகளில் 3 பாட சித்தி

விண்ணப்பப்படிவங்களை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை கல்லூரி அலுவலகத்தில் 200/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 24.02.2009

வெளிமாவட்ட மாணவர்களாயின் 250/- ற்கான காசு கட்டளையினை (M.O) செலுத்தி உபதபால் நிலையம், அத்தியடி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு அனுப்பி விண்ணப்படிவத்தினை பதிவுத்தபால் மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களிற்கு:-

பதிவாளர்
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி,
127,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.021 4591572

(2145)


# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நந்தி கொடி விநியோகம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நந்திக்கொடிகளை அச்சிட்டு, ஆலயங்களின் விசேட வைபவங்களுக்கு விநியோகித்து வருகின்றது. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருக்கின்ற இந்து ஆலயங் களின் மகாகும்பாபி ஷேகம், வருடாந்த தேர்த் திருவிழா மற்றும் விசேட உற்சவங்கள் என்பவற்றுக்கு சிறு எண்ணிக்கையான கொடிகளை திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

நந்திக்கொடிகளை பெற்றுக்கொள்ள விரும்பும் ஆலய பரிபாலன சபையினர், திணைக்களப் பணிப்பாளருக்கு கோரிக்கைக் கடிதத்தை நேரில் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை, நந்திக்கொடிகளின் பாவனையை இந்து மக்கள் மத்தியில் பரப்பும் நோக்கத்தின் அடையாளமாகவே நந்திக் கொடிகள் இலவசமாக திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

பெருந்தொகையான நந்திக்கொடிகளை பெற விரும்புவோர் தனியார் விற்பனை நிலையங்களில் அவற்றைக் கொள்வனவு செய்யலாம் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஓ-5)

# இரண்டு இலட்சம் சிறுவர்களுக்கு இலவச பால் வழங்கும் திட்டம்

சமூர்த்தி நிவாரணம் பெறுகின்ற மற்றும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு இலவச பால் வழங்கும் திட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.இத் திட்டத்தின் மூலம் இரண்டு வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் சிறுவர்கள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்தவருமானமுடைய குடும்பங்களின் வாழ்க்கைச் செலவைக்குறைக்கவும் மக்கள் மத்தியில் திரவப் பால் பாவனையை அதிகரிக்கச் செய்யவும் இத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறதுஇத் திட்டத்தின் படி ஒரு நாளைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சம் சிறுவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 25 நாட்கள் திரவப் பால் வழங்கப்படவுள்ளது.குடும்ப சுகாதார உத்தியோகத்தர் ஊடாக இத் திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (ஓ-5)

ஒரு சிங்கத்தின் தலைமையில் ஆடுகளைப் படையாகக் கொண்ட அணிவகுப்பு, ஒரு ஆட்டின் தலைமையில் சிங்கங்களைப் படையாகக் கொண்ட அணி வகுப்பை தோற்கடிக்கும். –அரேபியப் பழமொழி

வலம்புரி

## நெஞ்சைக் கசக்கிப் பிழிந்து உதிரம் கொட்டுகிறது!

வன்னியில் அகோர ஷெல் வீச்சினால் எங்கள் உறவுகள் கொல்லப்படும் பெருந் துயரச் செய்தி நெஞ்சை அடைக்கிறது.

தமிழர்கள் என்பதற்காக இந்தக் கொடூரம் நடந்தேறுகிறது.

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அகோர எறிகணைத் தாக்குதலில் முந்நூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடித்துப் பலியாகிப்போன செய்தியை எந்த மனிதப் பிறவியாலும் ஜீரணிக்க முடியாது.

இருபத்தோராம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தில் உலகம் வீறு நடையில் செல்லும்போது இலங்கை மண்ணில் சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்திற்காக தமிழர்களின் உயிரைப் பறிக்கும் படுபாதகம் நடந்தேறுகிறது.

பௌத்த சிங்கள நாடு என்ற ஒரே காரணத்திற்காக இந்த அட்டூழியம் நடக்கிறது.

போரினால் அழிவைத் தவிர வேறு எதனைத் தான் சாதிக்க முடியும்? இந்த அழிவு குறித்து ஆட்சியாளர்கள் எவருமே கவலை கொள்வதாக இல்லை.

தமிழர்களின் படுகொலை குறித்து உலகம் கவலை தெரிவிக்கிறது. ஐ.நா.செயலாளர் அதிர்ச்சி வெளியிடுகிறார்.

எனினும் உயிரிழக்கும் தமிழ் மக்க ளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

இந்தியாவின் கடைத்தனம் நம்ப வைத்துக் கழுத்தறுகிறது. வன்னியில் போர் நடந்து தமிழ் மக்கள் ஆற்றலைந்து உயிர் பிரிந்து போகும்வரை இலங்கைக்கு வருகை தராத இந்திய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி இப்போது கொழும்புக்கு வந்திருக்கிறார்.

எதற்காக அவரின் வருகை? வன்னியில் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தவா? அல்லது உயிரிழந்த தமிழரின் எண்ணிக்கை போதாதென்று சொல்லிவிட்டுப் போகவா?

எத்தனை கோரிக்கை, இலங்கைக்குப் போங்கள். யுத்தத்தை நிறுத்துங்கள். என்றெல்லாம் கேட்டபோது, அதுபற்றி பிரதமர் மன்மோகன் சிங் எந்த அறிவித்தலும் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்று கூறிய பிரணாப் முகர்ஜி இப்போது மன்மோகன் சிங் மருத்துவப் படுக்கையில் மயங்கி இருக்கும் போது எந்த அறிவித்தலோடு வருகிறார்?

எல்லாமே நாடகம், நடிப்பு. என் செய்வது! எங்கள் உறவுகளுக்கு இக்கதி என்ற போது நெஞ்சைப் பிழிந்து உதிரம் கொட்டுகிறது.

என் செய்வோம் இறைவா!

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் குழு விரைவில் பிடிபடும்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தும் குழு விரைவில் பிடிக்கப்பட்டு விடும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டுக்கு கிடைத்துவரும் இராணுவ வெற்றி களை மழுங்கடிக்கச் செய்யும் நோக்கில் செயற்பட்டு வரும் ஒரு குழுவே ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் இந்தக்குழு விரைவில் பிடிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இனந்தெரியாத இந்தக்குழு விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு அரசாங்கமே கர்ரணம் என எதிர்க்கட்சிகள் முன் வைக்கும் குற்றச்சாட்டுக் குறித்து கருத்துத்தெரிவித்த அவர் வெள்ளை வான் கடத்தல்களும் அரசாங்கத்தாலேயே மேற்கொள்ளப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனர்.ஆனால் இவற்றையெல்லாம் அரசாங்கம் செய்யவில்லை. பிறிதொரு இனந்தெரியாத பாதாள உலகக் குழுவினரும் முன்னாள் தமிழ் ஆயுதக்குழுவினருமே இவற்றைச் செய்கின்றனர் என்று கூறியுள்ளார்.

உண்மை என்ன என்பதை சர்வதேசம் நன்கு அறிந்திருப்பதுடன் ஊடகவியளார்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். (ஓ-5)

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மோதலில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரதும் கடமை

## ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூன் வலியுறுத்து

(சென்னை)

வன்னியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரதும் கடமையென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

மோதல்களுக்குள் சிக்குண்டிருக்கும் அப்பாவிப் பொது மக்களின் நிலைமை குறித்துக் கவலை வெளியிட்டிருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம், அம்மக்கள் இரு தரப்பினராலும் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்களின் நலன்புரித் தேவைகளுக்கு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் முன்னுரிமை வழங்க வேண்டும், அத்துடன், அந்த பகுதியிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஐ.நா. செயலாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தை இரண்டு தரப்பினரும் மதித்துச் செயற்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கும் பான்கீ மூன், உட்கட்டுமானங்கள், பாடசாலைகள், மனித நேய உதவிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களை வேறு இடங்களில் அமர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கும் அவர், இதேபோல ஏனைய தரப்பினரிடமும் உதவிகளைப்பெற்று மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இதேவேளை, வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு வடபகுதியி லுள்ள ஐ.நா. மற்றும் ஏனைய மனித நேய நிறுவனங்களின் பணியாளர்கள் உதவிகளை வழங்கி வருவதாக ஐ.நா. பேச்சாளர் மரியே ஒகேபீ தெரிவித்தார். (ஓ-5)

# அரசியலமைப்பு சபைக்கு பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பில் பெப்ரவரி 10ஆம் திகதி அறிவிக்கவும்

## உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவு

(கொழும்பு)

அரசியலமைப்பு சபைக்கு பிரதிநிதிகளின் நியமனங்கள் தொடர்பிலான இறுதி இணக்கப்பாடு தொடர்பில் பெப்ரவரி 10ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படாமையை ஆட்சேபித்து பேராசிரியர் சுமணசிறிலியனகே தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் சார்பாக மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி நெறி புள்ளே அரசியலமைப்பு பேரவைக்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் பூர்த்தி அடைந்துள்ளன என்று மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அரசியலமைப்பு பேரவைக்கு பேராசிரியர் சாவித்திரி குணசேகரம் பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்ன ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் பேராசிரியர் ஷெரீப்டீன் ஆகியோரை நியமிப்பதற்கு அரசியல் கட்சிகள் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சிறுபான்மைக் கட்சிகள் சார்பாக நியமிக்கப்பட்ட முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் ரி. எவ்.எவ்.மாயாதுன்னே அப்பதவியை ஏற்க மறுத்துள்ளதாகவும் சட்டத்தரணி மன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இதனையடுத்து சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து முன்னாள் கணக்காய்வாளர் நாயகத்துக்குப் பதிலாக புதிய ஒருவரை நியமிக்குமாறு சபாநாயகருக்கு அறிவித்துள்ள அதேவேளை அரசியலமைப்பு பேரவைக்கு பிரதிநிதிகளின் நியமனங்கள் தொடர்பிலான இறுதி இணக்கப் பாடு குறித்து பெப்ரவரி 10ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசியலமைப்பு சபைக்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்திடம் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு சபைக்கு கருத்து மோதல்கள் இடம் பெறாத வகையில் உறுப்பினரை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகரிடம் உயர்நீதிமன்ற நீதியரசர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## நீதிநெறிக் கோட்பாடுகள் என்றால் என்ன?



பிறருக்கு நன்மை செய்வது புண்ணியம், தீமை செய்வது பாவம். வலிமையும் ஆண்மையும் புண்ணியம், பலவீனமும் கோழைத்தனமும் பாவம். சுதந்திரம் புண்ணியம், சார்ந்திருப்பது பாவம். பிறரை நேசிப் பது புண்ணியம், வெறுப்பது பாவம். கடவுளையும் தன் ஆன்மாவையும் நம்புவது புண்ணியம், சந்தேகிப்பது பாவம். ஒருமையை அறிவது புண்ணியம், வேறுபாடு காண்பது பாவம், புண்ணியம் பெறும் வழியையே சாஸ்திரங்கள் காட்டுகின்றன.

# உலகளாவிய ரீதியில் தடை சட்டத்தை நீக்கியுள்ள ஒபாமா



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வெள்ளியன்று கடல்கடந்த நாடுகளில் குடும்ப நலத்திட்டங்களில் குடும்ப நலத்திட்டங்களில் ஈடுபடும் குழுக்களுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும் அவை கருக்கலைப்பில் ஈடுபடுவதற்கும் அவை அதனை சட்ட பூர்வமாக்குவதற்கும் உதவிகள் நல்குவதற்குமாக அமெரிக்கா நிதியுதவி செய்வதைத் தடை செய்துள்ள 8 வருடகாலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சட்டத்தை ரத்துச் செய்துள்ளார்.

இந்தப் பணிப்புரை நிர்வாகப் பணிப்புரையாக வெளிவந்துள்ளது. செவ்வாயன்று பதவியேற்ற பின் செயற்படுத்தப்பட்ட பல விடயங்களுள் இதுவுமொன்று அவர் தேர்தல் பரப்புரைக் காலத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதில் புதனன்று வழங்கிய பணிப்புரை இன்னொன்று பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் மேல் சித்திரைவதை போன்ற வன்முறைகளையும் தடை செய்துள்ளார்.

மேலும் குவான்ரனாமோவிலுள்ள தடுப்பு முகாமை ஒரு வருடகாலத்தில் மூடி விட வேண்டுமென்பதும் இன்னொன்றாகும்.

வெள்ளியன்று விடுக்கப்பட்ட உத்தரவு அமெரிக்க சனத்தொகை சந்ததி விருத்தி பற்றிய ஆரோக்கியம் பற்றியது. இது முன்னை நாள் ஜனாதிபதி புஷ்ஷினது காலத்தில் நடைமுறையிலிருந்த கொள்கையிலிருந்து முற்று முழுதாக வேறுபட்டதாகும். புஷ் கருக்கலைப்பு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்கு தடை விதித்திருந்தார். அவர் 8 வருடங்களுக்கு முன் ஜனாதிபதியானதும் மேற்கொண்ட முதல் பணி இதுவாகும்.

விமர்சகர்கள் இந்த வாய்ப்பூட்டு சட்டத்தை குளோபல் காக்றூள் என அழைத்தனர். அமெரிக்க நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் குழுக்கள் தத்தமது நாடுகளில் கருக்கலைப்பு சம்பந்தமான விவாதங்களில் பங்கு பற்றுதலைத் தடை செய்தது இச்சட்டமாகும்.

ஒபாமா மேலும் பகிரங்கமாகத் தான் ஐ.நா.சனத்தொகை நிதியத்திற்கு உதவியளிப்பதை திரும்ப ஆரம்பிக்கப் போவதாக மீண்டும் உரைத்துள்ளார். இதுவும் அவரது பரப்புரைகளுள் அடங்கிய ஒன்றாகும்.

ஐ.நா. சனத்தொகை நிதியத்திற்கு உதவியளிக்கும் விடயத்தில் நான் காங்கிரஸுடன் இணைந்து செயற்படும் நிலையை எதிர்பார்த்துள்ளேன் யூ.என்.எப்.பி.ஏ. க்கு மீண்டும் நிதியுதவி வழங்குவதனால் அமெரிக்கா ஏனைய 180 நாடுகளுடன் இணைந்து வறுமையைக் குறைக்கவும் பெண்களதும் பிள்ளைகளதும் ஆரோக்கியத்தைப் பேணவும் 154நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கு குடும்ப நல சம்பந்தமான உதவிகளை வழங்கவும் முடியும் என்றார் ஒபாமா.

கருக்கலைப்புக்கெதிரான கிறிஸ்தவ உரிமைக்கான குழுக்கள் கண்டித்தபோதிலும் பெண்களது உரிமைகளுக்கான குழுக்கள் ஒபாமாவின் செயற்பாட்டைப் பாராட்டியுள்ளன.

யூ.என்.எப்.ஏ.யின் நிர்வாகப் பணிப்பாளர் தோறயா அஹ்மட் ஒபாயிட் ஒபாமாவின் தீர்மானத்தைப் பாராட்டியுள்ளார். அவர் ஒபாமா இத் தீர்மானத்தைத் துரித கதியில் மேற்கொண்டதாகக் கூறுகிறார்.

அவரது செயற்பாடுகள் அவரது தலைமைத்துவத்தின் மேம்பாட்டை உறுதி செய்வதோடு அமைதியையும் கௌரவத்தையும் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் சமத்துவத்தை வழங்கவும் உலகின் வறிய நாடுகளில் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அவர் கொண்ட ஆவலை வெளிப்படுத்துகின்றன. இவையாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது சந்தான விருத்தி சம்பந்தமான ஆரோக்கிய நிலையை எய்தும் நடவடிக்கையாகும்.

வாயடைப்புச் சட்டம் நீக்கப்பட்டமை உலக முழுவதிலுமுள்ள பெண்களது உரிமைகள் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் ஒரு புதிய தலைமைத்துவம் உருவாகியுள்ளமையை நிரூபிக்கிறது என்கிறார் மாற்றத்திற்கான பணிப்பாளர் செறாசிப்பெல் அவர் மேலும் கூறுவதாவது,

உலகில் கீழ் மட்டத்திலுள்ள பெண்களால் மிகவும் வேண்டப்படுகின்ற நல்ல குடும்ப நலத்திட்டங்களுக்கான தகவல்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். அவர்கள் தமது கர்பந்தரிக்கும் நிலையைத் திட்டமிடவும் நல்ல ஆக்கபூர்வமான வாழ்க்கை முறையை உருவாக்கவும் வேண்டிய திட்டங்களையும் அறிவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நேற்று ஒபாமா , பயங்கரவாதிகளுக்கெதிரான சித்திரவதைகளைத் தடுக்க பணிப்புரை வழங்கினார். இன்று உலகளாவிய ரீதியில் பிறக்காத பிள்ளைகள் சித்திரவதை செய்யப்படுவதற்கெதிரான பணிப்புரையில் கையொப்பம் இட்டுள்ளார் என்றார் அவர்.

கிறிஸ்தவ உரிமைகளுக்கான குழுக்கள் உதாரணமாக போர்க்கின்ஸ் மெக்சிக்கோ சிற்றி பொலிசி உலகளாவிய ரீதியில் கருக்கலைப்பு குறைத்துள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் தடையை எதிர்ப்போர் எதிர்மறையான விளைவே உருவானதென வாதிடுகின்றனர்.

யூஎன்.எப்.பி. ஏ யின் பிரகாரம் இரண்டு இலட்சம் பெண்களுக்கு மேல் பாதுகாப்பான கருத்தடை முறைகள் பெற முடியாத நிலையில் வருடமொன்றுக்கு 74ஆயிரம் பெண்கள் பாதுகாப்பற்ற முறைகளினால் மரணமடைகின்றனர்.

பி.ஏ.ஐ.யின் அறிக்கை யொன்றின் பிரகாரம் 29 நாடுகளிலுள்ள மருத்துவ நிலையங்கள் தடையினால் செயலிழந்துள்ளன. லெசோ தோவில் உள்ள மருத்துவ நிலையம் 1998 -2000 ஆண்டுகளுக்கிடையில் 4இலட்சம் கொண்டோம்களை விநியோகித்துள்ளது.

கென்யாவிலுள்ள 8மருத்துவ நிலையங்கள் இத்தடையினால் மூடப்பட்டன. 30 வீதமான மருத்துவ சேவையிலுள்ளோர் பாதிக்கப்பட்டனர். கானாவில் பெரிய மருத்துவ நிலையமொன்றில் 50 வீதமான அதிகாரிகள் குறைக்கப்பட்டனர். கருத்தடை உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் பல பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உதவிகள் தடை செய்யப்பட்டதனால் பெண்களது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ளது. குடும்ப நலத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கிடைக்காத காரணத்தினால் இறக்கும் பெண்களது தொகையைக் குறைக்க ஒபாமா உதவ வேண்டும் என்கிறார் டொட்பி றெஸ்ரன்.

இன்னும் தடைக்கான ஆதாரவாளர்கள் தடையை நீக்குவது பாரிய எதிர் விளைவை உருவாக்கும் என்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் எத்தகைய குழுவினர் இவ் உதவி தொகைக்கு பொருந்துபவர்கள் என்பது வினாவாகும்.

ஒபாமாவின் பணிப்புரை இந்த நிதியுதவி சர்வதேச திட்டமிடப்பட்ட பெற்றார் சமாஜம் போன்றவற்றிற்கு அளிக்கப்பட வேண்டும்.

அவை வேண்டிக் கேட்பவர்களுக்கு கருக்கலைப்பு செய்யவேண்டும். இது சர்வதேச ரீதியாக கிடைக்கும் குடும்ப நல சேவையாக இருத்தல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக அமெரிக்க குடும்க நலத் திட்டத்திற்கு மிகப் பெரிய பங்களிப்புச் செய்து வந்துள்ளது.

சராசரியாக 500 மில்லியன் டொலர்கள் காங்கிரஸ் இதனை வழங்கினாலும் புஷ் அதனை செலவு செய்யவில்லை. அவர் இது சீனாவின் குடும்ப திட்டத்தை ஆதரிப்பதாகக் கூறினார்.

2009 ஆம் ஆண்டுக்கு குடும்ப நலத் திட்டத்திற்கு செனற் 40 மில்லியன் டொலர்களையும் சனப் பிரதி நிதிகள் 60 மில்லியன் டொலர்களையும் ஒதுக்கியுள்ளன. முடிவான தீர்மானம் இனித் தான் வரவுள்ளது.

ஐ.பி.எஸ்.




முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணைத்தாக்குதலில் உயிர் இழந்த இருவரின் சடலங்களையும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவரையும் எறிகணைத்தாக்குதலால் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் மனிதாபிமானப் பணியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை-இந்திய அணிகள் முதல் போட்டியில் இன்று மோதல்

(தம்புள்ளை)

இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று தம்புள்ளயில் நடைபெறுகிறது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டி இன்று தம்புள்ளயில் பகல் ஆட்டமாக நடைபெறுகிறது.

இலங்கை அணி சொந்த மண்ணில் விளையாடுவது சாதகமாக இருப்பதுடன் அண்மையில் பங்களாதேஷ் முக்கோணத் தொடர்,பாகிஸ்தான் அணியை 2:1 என்ற கணக்கில் வெற்றி கொண்ட நம்பிக்கையுடன் களமிறங்குகிறது.

அதேநேரம் இந்திய அணி கடந்த முறை இலங்கை வந்த போது ஒருநாள் தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது. சமீபத்தில் இங்கிலாந்து அணியுடனான தொடரில் நடந்த முதல் 5 போட்டிகளிலும் வென்று முத்திரை பதித்தது.

இரு அணிகளும் சமபலத்துடன் இருப்பதால் போட்டி விறுவிறுப்பாக இருக்கும். இலங்கை அணியின் சுழல் நாயகன் முத்தையா முரளிதரன் இன்றைய போட்டியில் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றுவதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைப்பார்.

தற்போது 500 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள முத்தையா முரளிதரன் மேலும் 3 விக்கெட்டுக்களை வீழ்த்துவதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 502 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலிடத்திலிருக்கும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வசிம் அக்ரமின் சாதனையை முறியடிப்பார்.

அணி அறிவிப்பு

ஒருநாள் தொடரின் முதல் மூன்று போட்டிகளுக்கான இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்த அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் போது இருந்த அதே அணியே மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. அணிவீரர் வருமாறு;

மஹேல ஜெயவர்த்தனா,(அணித்தலைவர்) குமார் சங்கக்கார,சனத் ஜெயசூரியா,திலகரட்ண டில்சான்,திலீன கன்டாம்பி,சாமர கபுக்கெதர,திலான் துஷார,பர்வேஷ் மகரூப்,நுவான் குலசேகரா,முத்தையா முரளிதரன்,அஜந்த மெண்டிஸ்,ஜெகான் முபாரக்,பெர்னான்டோ மற்றும் மத்தியூஸ்.

## முதலிடத்தை பிடிக்க போராடும் அணிகள்

(டுபாய்)

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணி 5:0 என வெற்றி பெற்றால் ஐ.சி.சி.தரவரிசைப் பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

இந்தியா இந்த போட்டியில் 5:0 என வெற்றி பெற்றால் 123 புள்ளிகளை பெறும். அதன் பின்னர் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் வெற்றி பெற்றால் இந்திய அணி தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறும்.

தற்போதைய நிலையில் அவுஸ்திரேலிய அணி முதலிடத்திலும் தென்னாபிரிக்கா 2ஆவது இடத்திலும் உள்ளன. தென்னாபிரிக்கா,அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றால் முதலிடத்தை பெறும்.

எனினும் அதன் பின்னர் நடைபெற உள்ள நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் வெற்றி பெற்றால் அவுஸ்திரேலியா மீண்டும் முதலிடத்தை பிடிக்கும்.

## சிம்பாவே வெற்றி

(மொம்பாஸா)

முதலாவது ஒருநாள் போட்டியில் சிம்பாவே அணி 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கென்ய அணியை வீழ்த்தியது.

கென்யாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டி நேற்று மொம்பாஸாவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி சிகும்புராவின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 309 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் சிகும்புரா 38 பந்துகளில் (3 பவுண்டரிகள் 7 சிக்ஸர்கள் அடங்கலாக) 79 ஓட்டங்களையும் சிபண்டா 77ஓட்டங்களையும் மஷா ஹட்ஷா 71 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரிகோலோ,ஹமன்டே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஒன்ஜங்கோ,வரைஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 307 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 197 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 109 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹமண்டே´74 ஓட்டங்களையும் அணித்தலைவர் லிகோயோ 37,வரைஜா 34,வாற்ராஸ் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெயின்ஸ் போர்ட்,சிகும்புரா, பினறஸ் மற்றும் கிறீமர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் உற்ஷயா,டபென்ங்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலைபெற்றது.

## ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசையில் குலசேகரவுக்கு இரண்டாம் இடம்



(டுபாய்)

பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரில் அபாரமாக பந்து வீசிய இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான்குலசேகர ஐ.சி.சி ஒரு நாள் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

லாகூரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மூன்றாவதும் கடைசியுமான ஒருநாள் போட்டியில் 7 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுகளை வீழ்த்திய குலசேகர தரவரிசையில் நான்கு இடங்கள் முன்னேற்றம் கண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இதன்போது அவர் தனது சக பந்துவீச்சாளரான முத்தையா முரளிதரனை முந்தியதோடு இரண்டாவது இடத்தில் இருந்த அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் நதன் பிரக்கனை மூன்றாவது இடத்துக்கு பின்தள்ளினார்.

ஐ.சி.சியின் பந்துவீச்சாளர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலிடத்தில் உள்ளதோடு முரளி 4ஆவது இடத்தில் இருக்கிறார்.

சமிந்த வாஸ் ஒருநாள் அணியில் இடம் பிடிக்காத நிலையில் இலங்கை அணியில் நிரந்தர இடம்பிடித்துள்ள நுவான் குலசேகர கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இதுவரை 24 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி 40 விக்கெட்டுக்களை பதம்பார்த்துள்ளார். இதன் பந்துவீச்சு சராசரி 18.00 ஆகும்.

இதுதவிர இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் அஜந்த மெண்டிஸ் 3 இடங்கள் முன்னேறி 13ஆவது இடத்தை பிடித்தார்.

அதேபோன்று இலங்கையுடனான தொடரில் மொத்தம் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் 9 இடங்கள் முன்னேறி 16ஆவது இடத்தை பிடித்தார்.

இதில் ஐ.சி.சி. துடுப்பாட்ட வீரர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடரில் மொத்தம் 255 ஓட்டங்களை பெற்று தொடர் நாயகன் விருதை வென்ற டி.எம்.டில்சான் 14 இடங்கள் முன்னேற்றம் கண்டு 29ஆவது இடத்தை பிடித்தார்.

இந்த தொடரில் பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்ட சல்மான்பட், அணித்தலைவர் செஹைப் மலிக்குடன் 15ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார்.

## ஒருநாள் தொடரின் தோல்விக்கு ரிக்கி பொன்டிங் பொறுப்பேற்றார்



(அடிலெய்ட்)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டி அடிலெய்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் தென்னாபிரிக்கா 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் எளிதாக வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 228 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா 2 விக்கெட் இழப்பிற்கு 223 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா ஒருநாள் போட்டி தொடரை 3:1 என தனதாக்கியது. ஏற்கனவே டெஸ்ட் தொடரி லும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் இந்த தொடர் தோல்விக்கு தாம் பொறுப்பேற்பதாக கூறியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் தன்னால் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்க முடியாததே தோல்விக்கு காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் ஆர்த்தர், கடைசி ஒருநாள் போட்டியிலும் தங்கள் அணி வெற்றிபெற்று தொடரை 4:1 என்ற கணக்கில் கைப்பெற்றுமென கூறியுள்ளார்.

## தரவரிசையில் இலங்கைக்கு மேலதிகமாக 2 புள்ளிகள்

இலங்கையுடனான ஒருநாள் தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்த பாகிஸ்தான் அணி ஐ.சி.சி.ஒருநாள் தரவரிசையில் 5 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி ஈட்டினாலும் அடுத்த இரண்டு போட்டிகளிலும் மோசமான தோல்வியை சந்தித்தது.

இதனால் ஐ.சி.சி. புதிய தரவரிசை பட்டியலில் பாகிஸ்தான் அணிக்கு மூன்று புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி 4ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் தற்போது 111 புள்ளிகளுடன் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. பதிலாக நியூசிலாந்து அணி 113 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்தை பிடித்தது.

இதேபோன்று பாகிஸ்தானுடனான தொடரை வென்ற இலங்கை அணிக்கு தரவரிசையில் இரண்டு புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்பட்டன.

எனினும் இலங்கை அணி தொடர்ந்தும் 107 புள்ளிகளுடன் 7ஆவது இடத்திலேயே காணப்படுகிறது. இந்நிலையில் இன்று ஆரம்பமாகவுள்ள இந்தியாவுடனான ஒருநாள் தொடரில் இலங்கை அணி சோபிக்கும் பட்சத்தில் அது தரவரிசையில் முன்னேற்றம் காண வாய்ப்பு உள்ளது.

ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி 128 புள்ளிகளுடன் முதல் இடத்தில் காணப்படுவதோடு 122 புள்ளிகளை பெற்றுள்ள தென்னாபிரிக்க அணி இரண்டாவது இடத்திலும் 119 புள்ளிகளை பெற்றுள்ள இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

(5)

## பெல்ப்ஸிற்கு விருது

(கொலராடோ)

அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கெல் பெல் ப்ஸ் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதைப் பெறுகிறார். அமெரிக்க ஒலிம்பிக் குழு 2008ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்களுக் கான விருதுகளை அறிவித்துள்ளது. இதன்படி சிறந்த விளையாட்டு வீரருக் கான விருதை 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் பதக்க சாதனை நிகழ்த்திய மைக்கெல் பெல் ப்ஸ் பெறுகிறார்.

சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான விருதுகளை ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை நாஸ்டியா லியூகினும் நீச்சல் வீராங்கனை நடாலி கவுலினும் பெறுகின்றனர். சிறந்த பாராலிம்பியன் வீரர் விருதை எரின் போவிச்சும் சிறந்த அணிக்கான விருதை அமெரிக்க கரப்பந்தாட்ட அணியும் பெறுகின்றது.

## இந்.முன்னாள் ஜனாதிபதி...

வெங்கட்ராமன் அனைவராலும் ஆர்.வி. என அன்பாக அழைக்கப்பட்டார். 1910ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி தஞ்சைமாவட்டம் ராஜாமடத்தில் பிறந்தார். சென்னை பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் பட்டமேற்படிப்பும் சென்னை சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பும் முடித்தவர்.

1935ஆம் ஆண்டு சென்னை உயர் நீதி மன்றத்திலும் 1951 ஆம் ஆண்டு டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் வழக்கறிஞராக பணியாற்ற தொடங்கியவர்.

காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்து இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று 1942இல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டதால் 2 ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றவர்.

1950 முதல் 1957 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1957 முதல் 67 வரை தமிழகத்தில் தொழில்துறை,தொழிலாளர் நலன், கூட்டுறவு, மின்துறை, போக்குவரத்து போன்ற துறைகளுக்கு அமைச்சராக பணியாற்றினார். 1980 இல் இந்திராகாந்தி அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் பணியாற்றினார்.

4 ஆண்டுகள் நாட்டின் 7வது துணை ஜனாதிபதியாக பணியாற்றி 1987 யூலை 25 இல் இந்தியாவின் 8ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

அப்பொழுது 1989 வி.பி.சிங்கையும், 1991இல் சந்திரசேகரையும் அதற்குப் பின் ராஜீவ்காந்தி பின்னர் பி.வி. நரசிம்மராவையும் பிரதமர்களாக பதவி அமர்த்தியவர். சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தவர்.

## தமிழ் மக்களின் நிலை...

அமைப்புக்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஐ.நா.செயலாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தை இரண்டு தரப்பினரும் மதித்துச் செயற்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கும் பான் கீ மூன் உட்கட்டுமானங்கள்,பாடசாலைகள்,மனித நேய உதவிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களை வேறு இடங்களில் அமர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கும் அவர், இதேபோல் ஏனைய தரப்பினரிடமும் உதவிகளைப் பெற்று மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்.

இதேவேளை,வன்னியில் தமிழர்கள் இனப்படு கொலைக்குள்ளாவதை நோர்வே வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வேயின் சர்வதேச விவகாரங்களுக்கான அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான சிறப்பு சமாதானத் தூது வருமான எரிக் சொல்கெய்ம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையின் வட பகுதியில் மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்களின் நிலைமை குறித்தும் நாம் ஆழ்ந்த கவலை கொள்கின்றோம்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் உடனே நிறுத்த வேண்டும்.

இருதரப்பும் மோதல்களால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எமக்குத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. இது மிகவும் பாரிய கவலைக்குரியதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புக்குரியவர்கள். மேலதிகமாக பொது மக்கள் உயிரிழப்பதை இரு தரப்பும் தவிர்க்க வேண்டும்.

மோதலில் சிக்கியுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரமாக நடமாடுவதை இரு தரப்பும் மதிக்க வேண்டும். அப்படி வெளியேறும் மக்களை ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளின் படியும் அனைத்துலக நடைமுறைகளின்படியும் கண்ணியமாக நடத்த வேண்டும்.

பொதுமக்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட மனிதாபிமான பொருட்கள் சென்றடைவதை இருதரப்பும் உறுதிப்படுத்த வேண்டும்.

படுகாயமடைந்துள்ள பொது மக்கள் -மருத்துவ சிகிச்சை களை பெறுவதற்கான அம்புலன்ஸ்கள் உள்ளிட்டவைகளை அனுமதிக்க வேண்டும் என்று அதில் எரிக் சொல்கெய்ம் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை மக்களை போர் நடக்கும் பகுதிகளில் இருந்து பாதுகாப்பாகவும் சுயாதீனமாகவும் வெளியேற அனுமதிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரு தரப்பையும் கேட்டுள்ளது.

தீவிரமடைந்துவரும் மோதல்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் மருத்துவமனைகளும் மருத்துவ ஊர்திகளும் எறிகணை வீச்சுக்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் ஐ.சி.ஆர்.சியின் தென்னாசிய பிரிவுத் தலைவர் ஜாக் த மெயோ கூறியுள்ளார்.

சுமார் 250 சதுரகிலோமீற்றர் பகுதியில் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் சிக்கியிருப்பதாகவும் அவர்கள் புகலிடம் பெறக்கூடிய பாது காப்பான இடமோ அல்லது வெளியேறுவதற்கான வசதியோ கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## முல்லைத்தீவின் பல...

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முள்ளியவளை,குருவிக்குளம்,புதுக் குடியிருப்பு கிழக்கு,உடையார் கட்டுகுளம்,அடம்பன்குளம்,விசுவமடு ஆகிய பகுதிகளில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் படைத்தரப்புக்கு சிறிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆயினும் புலிகளின் தாக்குதல்கள் படையினரால் தொடர்ந்தும் முறியடிக்கப்பட்டன. இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற தீவிர மோதல்களையடுத்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலி உறுப்பினர்களின் மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் ரி 56 ரக துப்பாக்கிகள்3, எம்.பி.எம்.ஐ ரக துப்பாக்கி1 மற்றும் வரைபடம் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-1)

## வடக்கு -கிழ...

அறிவித்துள்ள பாதுகாப்பு வலயத்தில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது இராணுவம் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் இதுவரையில் 800க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்க போதிய மருத்துவ வசதிகள் இல்லை. வைத்தியசாலைகள் மீதும் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் சிகிச்சை கடமைகளில் ஈடுபட முடியாதுள்ளது.

இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய முடியாதவாறு தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

உயிரிழந்த பொதுமக்களை நினைவு கூர்ந்தும், தாக்குதல்களை கண்டித்தும் காயப்பட்ட மக்களின் உயிர் காக்கப் போதிய மருந்துகளை அனுப்பக் கோரியும் அப்பாவி பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் விமான மற்றும் எறிகணை வீச்சுக்களை உடன் நிறுத்தக் கோரியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கு தாயகம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழ் மக்கள் மீதான...

முல்லைத்தீவில் பாதுகாக்கப்பட்ட பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழர்கள் பீரங்கித்தாக்குதலில் பலியானதைத் தொடர்ந்து இலங்கை நிலைவரம் குறித்து நேரில் ஆராய இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

இலங்கையில் அப்பாவித்தமிழர்கள் 300 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு பகுதியில் கடும் சண்டை நடந்து வருகிறது.

பொதுமக்கள் காட்டுப்பகுதியில் தங்கிக் கொள்ள பாதுகாப்பு இடம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் பீரங்கி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் குறித்து ஐ.நா அதிகாரி ஒருவர் கூறுகையில், அப்பாவி மக்கள் அடைக்கலம் புகுந்துள்ள பகுதி மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதைச்செய்தது யாரென தெளிவாகத் தெரியவில்லை. இராணுவம் தாக்குதல் நடத்தியதாக புலிகள் தரப்பிலும், புலிகள் தாக்குதல் நடத்தியதாக இலங்கை இராணுவத்தின் தரப்பிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்றார். இதேவேளை முல்லைத்தீவில் பாதுகாக்கப்பட்ட பகுதியில் தங்கவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழர்கள் பீரங்கித் தாக்குதலில் பலியானதைத் தொடர்ந்து இலங்கை நிலைவரம் குறித்து நேரில் ஆராய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று கொழும்பு வந்தார்.

இரண்டு நாள் பயணமாக இங்கு வரும் பிரணாப் முகர்ஜி ஜனாதிபதி ராஜபக்ஷவையும் வெளியுறவுத்துறை அமைச்சர் போகொல்லாகமவையும் சந்திக்கிறார்.

அப்போது பிரணாப் முகர்ஜி இலங்கை பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படி வலியுறுத்துவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கை அரசிடம் தமிழர்களுக்கும் மற்றவர்கள் போல் சம உரிமை அளிக்க இலங்கை அரசியல் சாசனத்தில் விரைவில் வழிவகைசெய்யப்படவேண்டுமெனவலியுறுத்துவாரெனதெரிகிறது.

இதேவேளை இலங்கைக்கு வந்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப்முகர்ஜி தமிழக முதல்வர் கருணாநிதியுடன் தொலைபேசியில் பேசினார். அப்போது தனது இலங்கைப் பயணம் குறித்து பிரணாப், முதல்வரிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது. (ச-5,14)


Microsoft
Systems Engineer MCP - MCSE
A+ (ComTIA Hardware Technician-AUSTRALIA)
கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
Rs.16000 DISCOUNT 01.02.2009 வரை மட்டுமே
Become an Engineer
புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.01.2009 07.00AM/12.00PM
விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764



பாராட்டி வாழ்த்துகிறோம்



கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உ/த பரீட்சையில் கணிதப் பிரிவில் 2A,B பெற்றுள்ள

செல்வன் கணேசலிங்கம் தர்மேஸ்வரன்

அவர்களைப் பாராட்டி பல்கலையிலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

எஸ்.கணபதிப்பிள்ளை -குடும்பம்

(C-2077)



வன்னியின் மனிதப் பேரவலத்தை நிறுத்தக் கோரி தொடர் உண்ணாவிரதம்

வன்னியில் நாளும் தொடரும் படுகொலைகளும், இடப்பெயர்வு அவலமும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி தொடர் உண்ணாவிரதம் இன்று புதன்கிழமை (28.01.2009)காலை 9.00மணி தொடக்கம் யாழ்.பேராலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ள வருமாறு அனைத்து சமய, சமூக அமைப்புக்களையும் பொது மக்களையும் வேண்டிக்கொள்கிறோம்.

இடம்- யாழ்.பேராலய வளாகம்.
காலம்-தினமும் காலை 9.00-மாலை 3.00மணி வரை

ஆயர், குருக்கள், துறவிகள், யாழ்.மறைமாவட்டம்.

(C-2080)



நீங்களும் விண்ணப்பிக்கலாம்

எமது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள உளசமூகப்பணிப் பயிற்சி நெறிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- எதிர்பார்க்கப்படும் கல்வித்தகைமை: க.பொ.த.(உ/த)
- பயிற்சிக் காலம் : 08 மாதங்கள்

விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும். வாரத்தில் ஒரு நாள் கள வேலைகளும், செய்முறைப்பயிற்சியும் இடம்பெறும்.மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 09.02.2009

விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பலாம். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

இயக்குநர்
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்,
35, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 222 9115

(C-2076)



முக்கிய அறிவித்தல்

கிருஷ்ணா அடகு கடை
370,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு (2007.12.31) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவற்றையும் 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு (2009.02.28) முன்பு மீட்டுக் கொள்ளவும்.

தவறின் 28ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2009ஆம் ஆண்டு (28.02.2009) அன்று விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

-உரிமையாளர்

370, K.K.S. Road, Jaffna.

(C-2057)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.